# காஞ்சி

20 காசு

7-9-69

நிறுவனர்: அண்ணாதுரை




உதவி ஜனாதிபதி திரு. பதக் அவர்களை தமிழக முதலமைச்சர் கருணாநிதி வரவேற்கிறார்

பிறந்தநாள் வாரத்தில்
வெளிவருகிறது!

முந்நூறு பக்கங்கள்
காலிகோ பைண்டு

# அறிஞர் அண்ணாவின்
# சிறு கதைகள்
## முதல் பகுதி

அறிஞர் அண்ணாவின்
திருஉருவப் படம்
போற்றிக் காக்க வேண்டிய
பொக்கிஷம்

புத்தகம் வேண்டுவோர் முன்
பணம் அனுப்பி பெயரை பதிவு
செய்துகொள்ளவும் (செப்டம்பர்
முதல் வாரத்திற்குள்)

★

விலை ரூ. 10

பரிமளம் பதிப்பகம்,
9, அவின்யு சாலை, சென்னை-34.

# 'காஞ்சி'

மலர் 6 | 7—9—69 | இதழ் 8


# மைசூரின் விளையாட்டு!

உணர்ச்சி பூர்வமான ஒருமைப்பாடு என்று பேசக் கேட்கும்போது, செவிக்கு இனிமைபயக்கத்தான் செய்கிறது. இந்த உணர்ச்சி பொங்கி வழிந்துவிட்டதால் தானே என்னவோ, மத்திய அரசும் அதன் தூண்களும் "உணர்ச்சிபூர்வ ஒருமைப்பாடு" என்பதிலே உள்ள 'உணர்ச்சி"யினைப்பற்றி இப்போதெல்லாம் பேசுவதில்லை.

ஒருமைப்பாடு என்ற சொல் பயக்கின்ற இன்பத்தை மறந்து, ஆழமாகச் சிந்தித்தால் நேர்மாருனதொரு பொருளும் அதற்கு உண்டு என்பதனை இது வரையில் நாடு அறிந்து கொள்ளாமலேயே இருந்திருக்கிறது. "ஒருமை" என்ற சொல்லுக்கு தனிமை யென்றும், தனித்துவமென்றும், தனித்திருத்தல் என்றும் பொருள் கொள்ள இடம் உண்டு. ஆகவே; ஒருமைப்பாடு என்ற சொல்லுக்கு "ஒன்றுபட்டிருத்தல்" என்ற பொருளுக்கு மாருக, 'தனித்திருத்தல்" என்ற பொருளை இப்போது மைசூர் முதல்வர் வீரேந்திர பாட்டில் கண்டு பிடித்து, அதனை நாட்டுக் கறிவிக்கும் முயற்சியிலீடுபட்டிருக்கிருர். பாராட்டத்தான் வேண்டும், விளைவைப் பற்றிக் கவலைப்பட வில்லையென்ருல்.

தமிழகத்தை, சிறப்பாக தஞ்சை—திருச்சிப் பகுதியினை வளங் கொழிக்கச் செய்கின்ற பேருதவியினைச் செய்வது, அப்பகுதியில் பாய்ந்தோடி வரும் பொன்னியாறேயாகும், சிலம்புகூட காவிரியைச் சிறப்பிக்கிறது. பண்டைப் புலவர்கள் யாரும் அதன் புகழ் பாடாமல் விட்டுவிடவில்லை. தமிழகத்தின் வாழ்வோடு, பொன்னியாறு இரண்டறக் கலந்திருந்தது—இருக்கிறது என்பதுவே இதன் பொருளாகும்.

மைசூர் மாநிலத்திலுள்ள 'குடகு' நாட்டில் முகத்தை வைத்துக்கொண்டு, தஞ்சை மாவட்டத்துக் காவேரிப்பூம்பட்டினத்தில் கால் நீட்டிப் படுத்துக் கொண்டிருப்பவள் பொன்னித்தாய்.

மைசூர்—தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்களையும் தன் பிறந்த ஊராகவும் புகுந்தவூராகவும் கொண்டவள் காவேரி என்ற பாடல் சிறப்பும் கொண்டிருக்கிருள் அந்தத் தாய்.

இமயம் முதல் குமரி வரையில் "ஒன்றுபட்டிருத்தல்" வேண்டும்; அதன் மூலம்தான் "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற பூங்குன்றனரது தத்துவத்தைச் செயல்படுத்த முடியும், அப்படியாளுல்தான் காலமெல்லாம் தன் காலடியில் மற்ற மாநிலங்களைப் போட்டு மிதித்து, அழுத்தி வைத்துக் கொண்டிருக்க முடியும் என்ற திட்டவட்டமான முடிவில் போதிக்கப் படுவதுதான் ஒருமைப்பாடு.

இந்திய அரசும் சரி, மற்ற மாநிலங்களும் சரி, இது வரையில் இந்தச் சொல்லுக்குக் கொண்டிருந்த பொருள் தவருனது; நான கூறுவதுவே சரியானது என்று விளக்கம் கொடுப்பதைப்போல மைசூர் முதல்வர் காவேரியாறு பற்றிய முடிவை வெளியிட்டிருக்கிருர். இது தமிழகத்தின் வளத்தை மட்டுமல்ல; வாழ்வையே பறித்துக்கொள்ளத் தக்கத் செயலாகும். சிறுபிள்ளைத் தனமான முடிவாகும்.

காவேரியின் முகத்துவாரம், மைசூர் மாநிலத்திலிருப்பதனுல் மட்டுமல்லாமல், பல்வேறு காரணங்களாலும், அது அந்த மாநிலத்திற்குரிமையுடையதுஎன் பதிலேயிருக்கும்எந்தவிதமானகருத்துவேறுபாடுமில்லை.

தமக்குச்சொந்தமான காவேரியை எப்படியும் பயன் படுத்திக்கொள்ள தங்களுக்கு உரிமையுண்டு என்று மைசூர் மாநிலத்தினுல் வாதிக்க முடியுமென்ருலும் அந்த வாதத்தின் மூலம் அண்டை மாநிலம், ஒன்றின் வாழ்வே பாதிக்கப்படுகிறது என்கிறபோது வாதத்தின் உண்மையைவிட் நிதர்ச்சனமான—யதார்த்தனமான நிலைமைக்கே முதலிடம் கொடுக்க வேண்டியிருக்கும்.

திரு. வீரேந்திரா பாட்டிலுக்கும், பழைய மைசூர் மாநில நிர்வாகிகளுக்கும் மிடையே யேற்பட்டிருக்கும் கொள்கைப் போட்டியின் காரணமாகவே இத்திட்டம் மீது அக்கறை காட்டப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டு உண்மையாக இருக்கும் பட்சத்தில் மைசூர் முதல்வர் கருத்திழந்து செயல்படுகிருர் என்றுதான் முடிவுகொள்ள வேண்டியிருக்கும்.

காவேரியாற்றின் மீது 20-க்கும் மேலான இடங்களிலே அணைகள் கட்டி, நீரைத்தேக்கிக் கொள்வது என்பதுதான் மைசூர் மாநிலத்தின் இப்போதைய திட்டம் என்று தெரிகிறது. இந்தத் திட்டத்துக்கு தமிழக அரசின் எதிர்ப்பு பற்றிக் கவலைப்படாததுடன், மத்திய அரசின் அனுமதி பற்றியும் கவலைப்படப்போவதில்லை என்றும் அறிக்கையில் தெளிவு படுத்தப்பட்டிருக்கிறது.

துடுக்குத்தனமான முடிவு என்று மட்டுமே இதனைக்கூற முடியாது. அண்மையில் மத்திய அரசு. மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்த வகையில் மைசூருக்கு அநீதி இழைக்கப்பட்டுவிட்டது என்று கூறி—சரியான நீதி, அதாவது கேட்கின்ற அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யவில்லையென்ருல், ஐந்தாண்டுத் திட்டங்களையே புறக்கணித்துவிடுவேன் என்றும் பேசி இருக்கிருர் முதல்வர்.

இதுபோன்ற தொடர்ந்த நடவடிக்கைகளின்மூலம், திரு. வீரேந்திர பாட்டில், தன் இதயத்தின் அடியில் விபரீதமான ஒரு முடிவை உருவாக்கி வைத்துக் கொண்டு செயல்பட முனைந்துவிட்டாரோ என்று ஐயங் கொள்ளவும் இடமுண்டு.

இப்போதுகூட காவேரியாற்றின் மீது, மூன்று இடங்களில் அணைகள் கட்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன எந்த வொன்றும் முழுமை பெறவில்லை யென்பதுடன், வேலை தொடங்கப்பட்டிருப்பதுகூட ஒரே திட்டம்தான் எனவும், அதுவும் ஒரேயொரு கட்டத்தில்தான் செயல்படுவதாகவும் தெரிகிறது.

தங்கள் திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ள பாங்குகளின் உதவியை நாடியிருப்பதாகவும் முதல்வர் அறிவித்திருப்பது, தன் அநியாயத் திட்டத்துக்கு அரசுடைமையான பாங்கியின் நடைமுறையினையும் பழிபடச் செய்திருப்பது வருந்தத்தக்கதாகும்.

1924-ல் செய்துகொண்ட காவேரியாற்று நீர் ஒப்பந்தம் 1974ல் புதுப்பிக்கப்பட வேண்டியிருக்கும் நிலையில் மைசூர் முதல்வர் தன்னிச்சையாகச் செயல்பட முனைந்திருப்பது, அடுத்த ஒப்பந்தத்தை அவர் ஒழுங்காக, நியாயமான முறையில் செய்துகொள்ளத் தயாரில் இல்லை என்பதைக் காட்டுவதேயாகும். இதனை விட்டு விட்டு, தமிழகத்தின் வாழ்வோடு விளையாடுவதை நிறுத்திக்கொள்வார் என்றே நம்புகிறோம்!

"இமயம் முதல் குமரி வரையில்" என்ற கீதம் பாடுவோர், மைசூர் முதல்வரது விளையாட்டை தடுத்து நிறுத்த முன்வருவார்கள் என்று நம்பிச் செயல்பட வேண்டும். 'ஒருமைப்பாடு" என்பதற்கு திரு. வீரேந்திர பாட்டில் தரும் விளக்கம்தான் சரியானதா? என்பதை காலம் நிர்ணயிக்கும்.

# கேட்டீரா சேதி!

## கமண்டலமேந்திக்கும் ஒரு கார்!

மாதம் மூன்னூறு ரூபாய்க்கு மேல் ஊதியம் பெறும் ஒருவரால் சுமார் 800 ரூபாய் விலையுள்ள சாதாரண சைக்கிள்கூட வாங்க முடிவதில்லை. அவர் பியூக் காருக்கோ, செவர் லேக்கோ; அல்லது சாதாரண ஸ்டாண்டர்டுக்கோகூட ஆசைப் பட முடியுமா? ஆயிரம் ரூபாய் சம் பளத்தில் அமைச்சர் வேலை பார்த் தால்கூட கை ஒழுங்காக இருக்கும் வரையில், அல்லது பரம்பரைச் சொத்து ஏதும் இல்லாவிட்டால், ஒரு கார் வாங்கி வைத்து வாழ்க் கையை அனுபவிப்பது முடியாத தாகும். ஆனால் ஆண்டியாக வாழும் ஒருவர், காவியுடுத்தி, கமண் டலமேந்தி வீடு வீடாகச் சென்று இரந்து பிழைக்கும் சந்யாசி ஒருவர், கார் வாங்குவது என்றால் சாதாரண சம்பவமா? அதுவும் அந்நியச் செலா வணி கொடுத்து, அயல் நாடு ஒன் றில் 14000 பவுன் விலையில் "ரோல்ஸ் ராய்ஸ்" மோடார் வாங் குவது என்றால்! வடபுலத்தைச் சேர்ந்த மகேஷ் யோகி என்பவர் இப்படி ஒரு மோடார் வாங்கி இருக் கிறாராம். இந்திய அரசின் அனுமதி பெறுமல் வெளிநாட்டில் கொள் முதல் செய்ய எப்படி முடிந்தது என்று இந்திய அரசு திகைத்துப் போய் இருக்கிறது. இலண்டனி லிருந்து 'ஈவினிங் ஸ்ண்டாண்டர்டு' என்ற ஏடு இதனைத் தெரிவித்ததும் தான் இந்திய அரசு விழித்துக் கொண்டு ஆராயத் தொடங்கி இருக் கிறதாம்!

## மிகவும் குறைவுதான்?

இதுவரையில் அமெரிக்கா, நூறு நாடுகளுக்கு மேல் கடனுதவி செய் திருக்கிறதாம்! இந்த நூறு நாடு களுக்கும் தலைமை வகிக்கும் நாடு எதுவென்று யூகிக்க முடிகிறதா? இந்தியாதான் தலைமையிடம் என்று அமெரிக்காவே அறிவித்திருக்கிறது. இதுவரையில் இந்தியா 6750-கோடிக்கும் மேல் அமெரிக்காவிட மிருந்து கடன் பெற்றுக் கொண் டிருக்கிறதாம்! உலக நாடுகள் பூரா வுக்குமாக அமெரிக்கா இதுவரை யில் 75,000 கோடிக்கு மேல் கடன் கொடுத்திருக்கும்போது, கேவ லம் 6750 கோடி என்பது மிகவும் குறைவுதானே!

## சாந்தி அடைவார் காந்தி!

காந்தியடிகளது நூற்றாண்டுவிழாக் காலத்தில் அற்புதங்களுக்குமேல் அற்புதம் விளைந்துகொண்டே இருக் கிறது, காங்கிரஸ் சோதனைக் களத் தில் சிக்கியிருப்பது போதாதென்று, காந்தியக்கொள்கைகள்வேறு, சோத னைக்குள் சிக்கவைக்கப்படுவதென் பது பரிதாபகரமானதுதான்! ஆந் திராவில் சில பகுதிகளில் மட்டும் இப்போது மது விலக்கு அமுலிலிருக் கிறது. அதனையும் எடுத்துவிட வேண்டும் என்ற கோரிக்கை பலப் பட்டிருக்கிறது, சட்டமன்ற உறுப் பினர்களே கோரிக்கை விடுத்திருக் கிறார்கள். அடுத்த அக். 2க்குள் முழு அளவும் தளர்த்தப்பட்டால் தான் காந்தியார், சாந்தி அடைவார் இல்லையா!

## கோரிக்கை வெற்றி!

தமிழக முதலமைச்சர் மாண்புமிகு கருணாநிதி அவர்கள் அண்மையில், மாயூரத்திலிருந்து விடுத்த ஒரு கோரிக்கை இப்போது வெற்றி கண்டிருக்கிறது. அ. இ. வானொலி நிலையத்தார் தமிழ் நாட்டுச் செய்திகளைக் கூறும்போது இதுவரையில் 'பிராந்தியச் செய்தி கள்' என்று தலைப்பிட்டு வந்தார்கள். முதலமைச்சரின் கோரிக்கையை ஒட்டி, 'பிராந்தியச் செய்திகள்' என்பதற்குப் பதிலாக 'மாநிலச் செய்திகள்' என்று கூறஒப்பி கடந்த 1–9–69 முதல் அவ்வாறே ஒலி பரப்பியும் வருகிறார்கள். இதுபோல். அ. இ. வானொலி, இன்னும் மாற்றிக் கொள்ளவேண்டியது எவ்வளவோ இருக்கிறது! மாற்றிக்கொள்ளும் என்றும் நம்பலாம்!

## பஞ்சத்துக்குப் பலி!

ராஜஸ்தான் மாநிலத்திலுள்ள சில பாலைவன மாவட்டங்களில் இந்த ஆண்டில் மட்டும் சுமார் 42,000 பேர் பசி, பஞ்சம், பட்டினி காரணமாக மடிந்திருப்பதாக, சட்ட மன்றத்தில் ஜனசங்க உறுப்பினர் பைரான்சிங் கூறி இருக்கிறார். பஞ் சாயத்துக்களில் உள்ள மரணப் பதிவேட்டையும் சாட்சிக்கு அழைத் திருக்கிறார் அவர். ஆளும் கட்சி சார்பில் வாதத்தைக் கேட்டுக் கொண்டவர்கள் யாரும் மறுப்புத் தெரிவிக்கவில்லையாம். எனவே செய்தி உண்மையாகிறது. உண்மை யானால் பயங்கரமானதுதான்! இந்த அளவுக்குப் பயங்கரமான ஒரு செய்தி, பரபரப்படையாததற்கு அங்கே 'நவசக்தி' ஏடு இல்லாதது தான் காரணமாக இருக்கவேண்டும்!

## வெட்டிப்பேச்சு


"தமிழகத்தில் மதுவிலக்குக் காரணமாக ஆண்டுதோறும் கிடைக்கவேண்டிய ரூ. 20 கோடி முதல் 40 கோடி வரையிலான வரு வாயை இழந்துகொண்டிருக்கிறது; உதவித் தொகை ஏதும் கிடைக் காததுமட்டுமல்ல—பெரும்பாலான மாநிலங்கள் மதுவிலக்குக் கொள் கையைக் கைவிட்டன—அதனால் "மதுவிலக்குபற்றியக் கேள்வி குறி பெரிதாக ஆகி இருக்கிறது" என்று முதலமைச்சர் அண்மையில் பேசி னார். மதுவிலக்குக் கொள்கையை அப்படியே கடைபிடித்து காந்திய வாதிகளாகத் தம்மைக் காட்டிக் கொள்வதான எண்ணத்தில், தமிழ கக் காங்கிரசார், மதுவிலக்குப் பற் றிப் பெரிதாகப் பேசத் தொடங்கி இருக்கிறார்கள். புதிய காங்கிரஸ் காரர் ஒருவர் இருகிழமைகளுக்கு முன்பு, 'மதுவிலக்கினை ரத்துச் செய் யட்டும்—என் முழு ஒத்துழைப்பினை யும் ஆட்சிக்குத் தருவேன்' என்று பேசி இருக்கிறார். அவர் வாயை அடைக்க வக்கற்றவர்கள், திறமற் றவர்கள் கலைஞரின் 'மதுவிலக்கு' கொள்கைப் பற்றிய பிரச்னையை திசை திருப்பிவிட எத்தனிப்பது பரிதாபகரமாக இருக்கிறது! துணைக் கண்டத்து 17 மாநிலங்களில் இரண்டு மூன்றுகூட கொள்கையைக் கடைப்பிடிக்கவில்லை ஆந்திராகூட தன்னைத் தயார்ப்படுத்திக் கொண் டிருக்கிறது. இந்நிலையில் தமிழகத் தில் மட்டும் கைவிட்டுவிட்டால் என்னவாம்! காங்கிரசாருக்கும் நல்ல தாய்ப்போகுமே!

★

தம்பி

தங்கம் விளையும் நம்நாட்டினிலே
தரித்திரம் இருப்பதும் எதனாலே...?
தட்டிக் கேட்டிடுந் தமிழ்வீரர்
சட்ட சபைக்குள் இல்லாமையால்!
தட்டிக் கேட்டிடுந் தமிழ்வீரர்
சட்ட சபைக்குச் செல்லாததேன்...?
வெட்டிப் பேச்சு வீணர்கள்தம்
வெறும் பேச்சு வெற்றிபெற்றதனால்!
இரும்பு கிடைக்கும் நாடிதனில்
இல்லாமை வாட்டுவதும் எதனாலே...?
தூங்கும் இரும்பை எழுப்பிவிடத்
துரைத்தனம நமக்கென்று இல்லாததால்...!
துரைத்தனம் நமதாக இல்லாததேன்...?
வடநாட்டுக் கடிமை ஆனதாலே...!
வடநாடு வாழ்வதும் எதனாலே...?
தென்னாட்டைச் சுரண்டும் வலியாலே...!
சுரண்டும் வல்லமை எதனாலே...?
சர்க்கார் டில்லியில் இருப்பதாலே!
டில்லியில் சர்க்கார் அமைவானேன்?
தேசியம் பேசியோர் ஏய்த்ததனால்!
தமிழர் உண்மையை அறியாததேன்?
தினசரி ஏடுகளின் புரட்டாலே...!
புரட்டொழியும் காலம் வாராததேன்...?
அறிவுத் தெளிவைப் பாமரர் அடையாததால்...!
இதையெல்லாம் இன்று கூறுவதேன்...?
இனியேனும் ஏமாற்றம தெளிவதற்கே!
ஏமாற்றுக் காரரிடம் சிக்குவதேன்...?
சுண்ணாம்பை வெண்ணெய் என்பதாலே!
தெளிவினைப் பெறுவது எப்போது?
தேர்தல் பொறுப் பறியும்போது...!

# வீட்டு விளக்கு!



# உன்னைப் போல்தான் ஊர்மிளாவும்......

பொறுப்பினை உணர்ந்தோர் செயல்யாது?
புதுஆட்சி அமைத்திட வழிகாணல்
ஆட்சியில் புதுமை கேட்போர்யார்?
அருந்தொண் டாற்றிடும் தி. மு. க.!
காங்கிரஸ் ஆட்சி வேண்டாமோ?
காட்டுத் தீயை வேண்டுவையோ...?
வீட்டு விளக்குத் தி. மு. க.
நாட்டுத் தொண்டன் அதுவேயாம்!
வீட்டு விளக்கை ஏற்றிடுவீர்!
நாட்டு நலனைப் பெற்றிடுவீர்!

எனக்கு மட்டும், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமியின் குரல் இனிமை இருந்தால் வீடெல்லாம் கேட்கும்படி நாடெங்கும் சென்று இதுபோலப் பாடிக் காட்டுவேன்! பாடல் ஏதேனும் சுவைபடப் பாடிட வேண்டும் என்பதாலே அல்ல; நாடு கேட்டிட வேண்டிய 'செய்திகள்' இதுபோல, எங்கும் பரப்பப்பட வேண்டும் என்ற ஆர்வத்தினாலே.

பேச்சாலும் பாட்டாலும் கூத்தனாலும், ஓவியங்களின் துணைகொண்டும், தம்பி! நாம்நாட்டு மக்களுக்கு நல்ல முறையிலே அரசியல் சூழ்நிலைகளை எடுத்து விளக்கி, அனைவரும் உண்மையை உணர்ந்திடச் செய்தால் மட்டுமே, நாம் எடுத்துக்கொண்டுள்ள காரியத்திலே வெற்றி கிட்டும்; அந்த வெற்றியைப் பொறுத்தே இருக்கிறது மக்களாட்சியிலே மாண்பு வளருவது! நோக்கம் தூய்மையானது என்பதனாலேதான், பணபலமற்ற நாம் இந்த கடுமையான 'பலப் பரீட்சை'க்கு நம்மை நாமே உட்படுத்திக்கொண்டோம். நானேர் கூட்டத்திலே கூறினேன், தம்பி, பணம் இருக்கிறது ஏராளமாக, காங்கிரசாரிடம். ஆனால் அந்தப் பணத்துக்குப்பலம் இல்லை என்று. சொல்லழகு கருதிக் கூறினதல்ல, உள்ளத்திலே உண்மையாகப்பட்டது; சொன்னேன். நான் அங்ஙனம் பேசிக்கொண்டிருந்தது சேறும் சகதியும் நிரம்பியதோர் திடல்! மழை வேறு பெய்துகொண்டிருக்கிறது! எனினும் ஆடவர் அனைவரும், பெருமழை பற்றிப் பொருட்படுத்தாமல் நாங்கள் இருக்கிறோம் காண்பாய், என்று பெருமிதத்துடன் என்னை நோக்கி விழி மூலம் மொழிந்திட விழைந்தனர்; ஆனால் அவர்தம் எண்ணம் ஈடேற வழி இல்லை! ஏனென்று கேட்கிறாயோ!! மழை பெய்வது பற்றித் துளியும் கவலையற்றுத் தாய்மார்கள் பலர் அந்தத் திடலில் நின்றுகொண்டிருந்தனர்! அவர்களின் ஆர்வத்தைக் கண்ட பிறகு, ஆடவர் காட்டிய ஆர்வத்துக்குத் தனிச் சிறப்பு எங்ஙனம் இருந்திட முடியும்!!

திடலில் நான் பேசிக்கொண்டிருக்கிறேன்—எதிர்ப்புறத்தே, பெரியதோர் மாளிகை! உட்புறத்தின் உன்னதம் எப்படி இருக்குமென்பதை வெளிபுறத்தின் கெம்பீரத்தைக் கொண்டுதான், நீயும் நானும் யூகித்துக் கொள்ள வேண்டும், அந்த மாளிகை, முதலமைச்சரும் துணை அமைச்சர்களும், துணிந்து கொள்கையைத் துறந்தால் அமைச்சர்களானேரும், வீற்றிருந்திடும் நிலைபெற்றது!

டில்லி. நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் மாளிகை தம்பி! உனக்கும் எனக்கும், ஏழை எளியவர்களுக்கும், உடலிலே அழுக்கு இருந்திடலாகாதே என்ற அக்கறையால் உந்தப்பட்டு, வெள்ளைக்கார நாட்டுச் சோப்புக் கட்டிகளை வண்டி வண்டியாகத் தருவித்து விற்று, 'தேச சேவை' செய்துவந்த சீமானுடைய சிங்கார மாளிகை!

மகாத்மா, கோலைக்கையில் பிடித்தபடி, தண்டிக்கு 'யாத்திரை' சென்றாரே, அப்போதும் சரி, சபர்மதி ஆஸ்ரமம் அமைத்து சத்தியாக்கிரகத் தத்துவத்தை நாட்டுக்கு அளித்தாரே, அப்போதும் சரி, எர்வாடா சிறையிலே அடைக்கப்பட்டிருந்தாரே அப்போதும் சரி, இந்த மாளிகை வாசி, வெள்ளையன் நடத்திடும் கொடுமையைக் கண்டு வெதும்பினதில்லை! காந்தியார் ஏற்றுக்கொண்ட கஷ்ட நஷ்டம் கண்டு இந்தக் கனவான் கலங்கினதில்லை!! இந்தச் 'சேதி'களையெல்லாம் படித்திடவாவது அவருக்கு நேரம் இருந்ததா என்பதுகூட ஐயப்பாடுதான். டன் ஒன்றுக்கு இலாபம் நாநூற்று நாற்பத்தைந்து வீதம் ஆறுயிரத்துப்பதினாலு டன் சோப் விற்றதிலே, இலாபம், வரவு...என்ற 'கணக்கு' பார்த்திடவே கருத்தைச் செலவிட முடிந்தது! அவர் இப்போது, நிதி அமைச்சர், காங்கிரசாட்சியில்! மகாத்மாவின் மாண்பு பற்றி, அவரை அழைத்துப் பேசச்சொன்னால், அற்புதமாகப் பேசுவார்! அவருடைய அணிமாடத்துக்கு எதிர்ப்புறத்தில், ஆளை அழுத்திவிடும் சேறும், காலைக் குத்திவிடும் கள்ளியும் முள்ளும் நிரம்பியதோர் திடலில், நான் பேசுகிறேன்! என்னைத்தள்ளு, எண்ணற்ற மக்கள், தி. மு. கழகத்துக்கு ஆதரவு அளித்திட ஆர்வத்துடன் வந்து கூடி, வாக்களிக்கின்றனர்.

இந்தத் திடலுக்கு நான் சென்று கொண்டிருந்த போது, தம்பி, வெகு அருகாமையில், புயலையும் எதிர்த்து நிற்கக்கூடிய பெரியதோர் அலங்காரக் கொட்டகையைக் கண்டேன்! ஜெகஜ்ஜோதியாக இருக்கிறது என்பார்களே, அப்படி மின்சார விளக்குகள்! நூறு மோட்டார்களுக்குக் குறைவிராது! உள்ளே 'ஆலாபனை'!! தம்பி! சங்கீத வித்வத் சபையின் விழாக் கொட்டகை அது. அதையும் பார்த்துவிட்டு, திடலில் சென்று நமது கூட்டத்தையும் பார்த்தேன்! எதிரேயோ சோப்புச் சீமானுடைய மாளிகை!! என்னென்ன தோன்றியிருக்கும், எண்ணிப்பார், தம்பி, எண்ணிப் பார்! உனக்கும்தான் என்னென்ன தோன்றுகிறது, கூறேன்!!

"காம்போதியடி, காவேரி! அவர்பாடிக் கேட்க வேண்டும், இவருக்கு எப்போதும் 'வராளி'தான்"

"அதென்னடி அம்சா! அப்படிச் சொல்லிவிட்டாய் போனமாதம் இவர், ரசிக ரஞ்சனி சபாவில், தோடி பாடினார், என்ன பிரம்மானந்தமாயிருந்தது தெரியுமோ..."

"உன்னைப்போலத்தான் ஊர்மிளா சொல்கிறாள்..."

"அது கிடக்குது, ஏண்டி, ஊர்மிளா ஆத்திலே ஒரு உம்மணா மூஞ்சி வந்திருக்கே யார் அது?"

"நேக்கு என்னடி தெரியும். ஒவ்வொரு புதுமுகம் வருகிறபோதும். அவ, ஒவ்வொரு புது உறவாச் சொல்றா. யார் கண்டா?"

"போடி! போக்கிரி! நோக்கு எப்பவும் சந்தேகம் தான்."

# பணம் இருக்கிறது—பலம் இல்லையே!

"தப்படி அம்மா, தப்பு! சாட்சாத் ஜானகி அவள், போதுமோ.........சரி சளசளன்னு நாம பேசிண்டிருந்தா, சபாக்காரா கோபிப்பா...இதோ 'ஜவாளி ஆரம்பிச்சுட்டார், கேட்போம்"

தம்பி! ஒவ்வொரு உருவமும் ஒரு இலட்சத்தைச் சுமந்துகொண்டு, இதுபோல உல்லாசமாக உரையாடி கொண்டிருக்கும் இடம், அந்தக் கொட்டகை,

திடலிலே கூடிய நமது மக்களோ தோடிக்கும் காம்போதிக்கும், காதுகொடுக்க நேரம் படைத்தவர்களா!

"ஏன், இன்னும் மார்வாடி பாக்கியைக் கட்டணும், என்கிற பயம் வரலியா?"

"பணம் வந்தாத்தானே!"

"போன இடத்திலே..."

"போய்வா என்கிருன்..."

"உடனே நீ வந்துவிட்டயா? ஆமா, இப்படி இருந்தா எப்படி ஆகும்! அவன் ஈவு இரக்கம் இல்லாத வனுச்சே! உள்ளே புகுந்து, சாமான்களைக்கூடத் தூக்குவானே..."

"தூக்குவாண்டி, தூக்குவான்! இந்த துரைசாமி பிணமாரு தூக்குவான்! இப்ப, உள்ளே நுழைந்தா, என்ன நடக்கும் தெரியுமேல்லோ, எலும்புக்கு ஒரு அடியா எண்ணி அடிப்பேன்..."

"போதுமே, உன்னோட வீராவேசம், பட்ட கடனைக் கட்ட வக்கு இல்லாவிட்டாலும், பட்டாசு' வெடிக்கிற மாதிரி பேசறதிலே குறைச்சல் இல்லே..."

தம்பி! நமது ஏழைக் குடும்பங்களிலே இதுபோன்ற ஆலாபனங்களும், அதற்கேற்ற தாள வரிசைகளும் தானே, காண்போம்!

அந்த அலங்காரக் கொட்டகை. எதிரே இருக்கும் சீமானின் மாளிகை, இவற்றைக் கண்டதாலே, எனக்கு இவ்விதமெல்லாம் எண்ணம் பிறந்ததே தவிர, ஆர்வம் பொங்கிடும் நிலையில் பல்லாயிரவர் அங்கு திடலில் மழையையும் பொருட்படுத்தாமல் நின்று கொண்டிருந்ததைக் கண்டபோது, ஏக்கம் பறந்த இடம் தெரியவில்லை; அதுமட்டுமல்ல, என் உள்ளம் சொல்லிற்று, "இதோ நீ காணுகிருயே, உழைத்து அலுத்த மக்கள்! ஏழை எளியவர்கள்!! நாளைக்கு என்ன என்று இன்று கூறிட முடியாத நிலையினர்! நாலு நாட்கள் படுக்கையில் படுத்தால், குடும்பம் என்ன செய்யும் என்ற கவலைப் பட வேண்டியவர்கள்! இந்த ஏழை எளியவர்கள் ஒன்றுபட்டு நின்றிடும்போதெல்லாம், மாட மாளிகையும் கூடகோபுரமும் சரிந்ததாகத்தானே வரலாறு சாற்றுகிறது! ஏதேதோ படித்தேன் என்று பேசுவாயே, பேதையே! இந்த மக்கள் சேற்றிலும் சகதியிலும் இருந்தால் என்ன! சீமான்கள் மாளிகைகளிலே இருந்திட்டால் என்ன!! கவலை குடைவானேன், கற்றதை மறந்திட்டாலொழிய! அவர்கள் சிலர்; நாம் மிகப்பலர் என்று ஷெல்லி கூறினனே, கவிதையைப் படித்துப் படித்துச் சுவைத்திருக்கிருயே! இப்போது ஏன் கவலை! நிமிர்ந்து நில்! நாட்டுக்குடையவர் எதிரே இருக்கிருர்கள், அஞ்சாமல் பேசு! ஊராள்வோர் யார் என்பதைத் தீர்மானிக்கும் தகுதியும் உரிமையும் படைத்தோர் உன் எதிரிலே, எனவே ஏக்கமற்று, கூற வேண்டியதை எடுத்துக் கூறு என்று கட்டளையிட்டது; பேசினேன்.

இதை உன்னிடம் இப்போது நான் சொல்வதற்குக் காரணம், தம்பி, தேர்தல் நெருங்க நெருங்க, காங்கிரஸ் கட்சியின், பணம் பல உருவங்களிலே நாட்டிலே ஏராளமாக நடமாடும்! கவலை குடையட்டும், மருட்சி ஏற்படட்டும் என்பதற்காகக் கூறுவர், இந்தத் தொகுதியில் உள்ளவர் புத்தம்புது நோட்டுகளாக எழுபத்து ஐயாயிரம் அடுக்கிவைத்து விட்டாராம்; அந்தத் தொகுதியிலே, கிராமத்துக்கு நாலாயிரம் வீதம் பணம் ஒதுக்கிவிட்டாராம்; என்றெல்லாம் பேசுவர்; அந்தச் சமயத்திலெல்லாம், தம்பி, நீ நண்பர்கட்குச் சொல்லு, காங்கிரசிடம் பணம் இருக்கிறது. ஆனால் அந்தப் பணத்துக்குப் பலம் இல்லை என்று எடுத்துக் கூறு. நாட்டிலே உள்ள நல்லவர்களைக் கேட்டுப்பார், உங்கள் கட்சி எந்தக் கட்சி என்று எடுத்துக் கூறச் சொல்லு.

எந்தக் கட்சி உங்கள் சொந்தக் கட்சி

இராமநாதபுரம் ராஜா

செட்டிநாட்டு ராஜா

குட்டிக் குபேரர்கள்

ஆலை முதலாளிகள்

ஆகியோர்

கொட்டமடிப்பது காங்கிரஸ் கட்சி.

பாடுபட்டுப் பிழைப்போரே!

உழைத்து உருக்குலைந்தோரே!

உங்கள் கட்சியாகக் காங்கிரஸ் இருக்க முடியுமா?

என்று கேட்டுப்பார்! பதில் அளிக்கத் தயங்குவர், தம்பி உடனே மீண்டும் அவர்களை நோக்கிக் கேள்,

புள்ளிமான் குட்டிக்குப்புலியாபால் கொடுக்கும்?

என்று!

ஏழை எளியவர்கள் நடுத்தரக் குடும்பத்தார்' பணம் காங்கிரஸ் கட்சியிடம் இருப்பது கண்டு அஞ்சத்தான் செய்வர்; ஆனல் அந்த அச்சத்துக்கு இடமளித்தால் உள்ள கஷ்டம் ஓராயிரமாகி, வாழ்வில் மேலும் வேதனை படர்ந்திடும் என்பதை எடுத்துக் கூறுவதோடு

பாடம் புகட்டுவீர்!

வரிச்சுமை ஏறிக்கொண்டேதான் இருக்க வேண்டுமா?

---

## எழுத்தாளர்களுக்கு...

கதை—கட்டுரை—கவிதை முதலான எழுத்தோவியங்கள் அனுப்பும் எழுத்தாளர்கள் காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாகவும்—சுத்தமாகவும் எழுதுவதோடு முழு முகமுவரியும் போதிய அஞ்சல் தலையும் வைத்து அனுப்ப வேண்டுகிறோம்.

—ஆசிரியர்

# காட்டிலும் நாட்டிலும் காண்பததுவே!

வாழ்விலே விசாரம் இருந்துகொண்டுதான் வரவேண்டுமா?

பரிகாரம் தேடவேண்டாமா?

ஆளும் கட்சிக்கு உங்கள் அல்லல் தெரிய வேண்டாமா?

உங்கள் மனக்குறை தெரிந்தால்தானே, ஆளும் கட்சி, குறைபாடுகளைப் போக்கும்?

மீண்டும் உங்கள் ஓட்டுகளைக் காங்கிரசுக்கு அளித்தால், குறைபாடு நீடிக்கும்; கசப்பு வளரும்.

இந்த முறை பாடம் கற்பித்துப் பாருங்கள்!

தட்டிக் கேட்டிட,

சர்வாதிகாரம் சாய்ந்திட,

தி. மு. க.

அபேட்சகர்களுக்கு ஓட்டு அளியுங்கள்.

புதுவாழ்வுக்கு வழி காணுங்கள்!

என்ற நல்லுரையை அளித்திடு இல்லமெல்லாம் நல்லோர் உள்ளமெல்லாம், உண்மை சென்று தங்கிடும் வகையிலே எடுத்துக் கூறிடு. பிறகு பார், வெற்றி நம்மைத் தேடி வருகிறதா, இல்லையா, என்று.

பணம் இருக்கிறது காங்கிரசாரிடம், ஆனால் அதற்குப் பலம் இல்லை என்று நான் கூறுவதற்குக் காரணம், தம்பி! நாட்டு மக்களே சிறிதளவு சிந்தித்தாலே புரிந்து கொள்வார்கள். அந்தப் பணம், ஏழை எளியவர்களைப் பார்த்து சொந்த வாழ்விலே சிக்கிக் கிடக்கும் நடுத்தரக் குடும்பத்தினரைப் பார்த்து, என்ன பேசுகிறது என்கிறாய்! "உன் கஷ்டமெல்லாம் தீர்ந்து போகும்! காருள்ளளவும், கடல் நீர் உள்ளளவும், உன்னைக் கலி தீண்டாது. உன் மாடுமனை, மக்கள் சுற்றம் எல்லாமே இன்பம் பெறும்!" என்று பேசும். ஒருபோதும் இல்லை. "பாடுபடுபவனே! என்னைக் காட்டி உன்னை ஏய்க்கிறானே எத்தன்! ஏமாளியாகலாமா? நான் எத்தனை நாள் உன்னோடு இருக்கப்போகிறேன்! ஒரு நொடியில் உருண்டோடிப் போவேன். உன் வேதனை அத்தனையும் நான் தீர்க்கவாபோகிறேன்! உன் எதிர்காலத்தை, உன் குடும்ப நலனை, உன் நாட்டின் தன்மானத்தை, அத்தனையையும் இழந்துவிடுகிறாய், இளித்துப் பேசிடும் இந்தப் பேர்வழி என்னை உன்னிடம் தந்ததால் என்னைக் கண்டு மயங்கிவிட்டால் பிறகு உன் உரிமையை இழக்க நேரிடும், ஊராள வருவோர் உன்னையே உதாசீனப்படுத்துவார்கள், உன்னைப் பெயரிட்டும் அழைக்கமாட்டார்கள். நீ பெற்ற தொகையைக் குறிப்பிட்டு அழைப்பார்கள். யார் வருவது ஆறணாவா! ஓஹோ எட்டணா வருகிறதா? வாங்கய்யா ஒரு ரூபா! வாங்க வாங்க பச்சை நோட்டு!—என்று பரிகாசம் பேசுவார்கள். ஊர் வாழத் திட்டமிடக் கூடாதா என்று அவர்களைப் பிறகு நீ உரிமையோடு கேட்டிட முடியாது. போதுமய்யா, போதும், என்ன செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும் என்பது எமக்குத் தெரியும்—'ஓட்டு'ப் போட்டதாலேயே ஏதும் பேசி விடலாம் என்று எண்ணிக்கொள்ளாதே. எல்லாம் எட்டெட்டணா கொடுத்துத்தான் ஓட்டுப் பெற்றோம், என்று அலட்சியமாகத்தான் பேசுவர். எனவே, வேண்டாமய்யா இந்த அற்ப ஆசை—என்னைத் திருப்பி அவன் முகத்திலே வீசி எறிந்துவிடு! வெட்கமும் வேதனையும் ஏற்படுத்திக் கொள்ளாதே" என்றல்லவா அந்தப் பணம் பேசும். ஆகையினாலேதான் தம்பி, காங்கிரசிடம் பணம் இருக்கிறது, ஆனால் பலம் இல்லை என்று கூறுகிறேன். சரிதானே நான் சொல்வது?

உழைப்பாளர்களுக்கு மட்டும், அவர்கள் எப்படியெப்படி வஞ்சிக்கப்பட்டு விட்டிருக்கிறார்கள் என்பது நல்ல முறையிலே அறிவிக்கப்பட்டால், தம்பி அவர்கள், காங்கிரசார், ஓட்டுகளைப் பறிப்பதற்காகக் காசு வீசும்போது, காறித் துப்புவார்களே யன்றி, ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

"ஆஹா! அழகு! அழகு! அற்புதம்! அற்புதம்!"— என்று சொன்னது புலி.

'புலியாரே! புலியாரே! எதன் அழகு பற்றிப் பேசுகிறீர்?" என்று கேட்டது ஓநாய்.

'ஓநாயாரே! மானின் உடலிலே உள்ள புள்ளியின் அழகைத்தான் சொல்கிறேன்" என்று புலி சொல்லிற்று!

'புலியாரே! நான்கூடப் பார்க்க வேண்டுமே, எங்கே அந்தப் புள்ளி மான்?" என்று கேட்டது ஓநாய்.

"என் வயிற்றிலே!" என்று கூறிக்கொண்டே ஏப்பம் விட்டது புலி!

இது காட்டில்

நாட்டில்

'ஏழையின் உழைப்பு எவ்வளவு அருமை தெரியுமா?' என்று பூரித்துப் போகிறான் முதலாளி.

'அப்படியா? எங்கே, அவனைக் காட்டும் பார்க்கலாம்', என்று கேட்கிறது சர்க்கார்—சில வேளைகளில்,

'முடியாதே! அவன் என் வயிற்றுக்குள்ளே அல்

## ஆசிரியர்—தேவையில்லை?

மக்கள் பெருக்கம் மிகுதியாக மிகுதியாக வேலையில்லாத் திண்டாட்டமும் மிகுந்துகொண்டே போகும். இதே போல் எந்திரங்களின் வளர்ச்சி மிகமிக, உடலுழைப்பு குறைந்துகொண்டே வரும். எத்தனையோ பணிகளுக்கு இப்போது மனித உழைப்பைக் குறைக்கும் 'கம்ப்யூட்டர்கள்' பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில், 'பாடர்பர்ன்' என்ற ஊரில் உள்ள ஒரு பல்கலைக் கழகத்தில் ஆசிரியர்களது பெரும்பான்மையான அலுவல்களைக் கம்ப்யூட்டர்கள் செய்கின்றனவாம், கல்வி போதனையுடன், மதிப்பெண்கள் வழங்கும் வேலையைக்கூட இவைகள் முடித்துவைக்கின்றனவாம். பல்வேறு பல்கலைக் கழகங்களிலும் இது பயன்படுத்தப்பட்டாலும், 'பாடர்பர்னில்' புதுமைகள் சில புகுத்தப்பட்டிருக்கிறதாம்! இது வெற்றி தந்தால் உலகில் ஆசிரியர்களே இல்லாமல் கல்வி போதனையை வெற்றிகரமாக்க முடியும் என்று நம்பப்படுகிறதாம்! (யூ. பி. எஸ்.)

# நாடும் நலமும் நம் பக்கத்திலேதான்!

லவா இருக்கிறான்! விழுங்கிவிட்டேனே' என்று கூறிவிட்டு, ஏப்பம் விடுகிறான் முதலாளி.

'அப்படியா!

அதிர்ஷ்டக்காரனய்யா நீ'

என்று கூறுகிறது, சர்க்கார்.

இந்த ஆட்சிமுறை நீடிக்கவே காங்கிரஸ் ஓட்டு கேட்கிறது.

இந்தச் சூட்சமம் தெரிவிக்கப்பட்டு, மக்கள் விழிப்புணர்ச்சி பெற்றுவிட்டால் காங்கிரசினிடம் குவிந்துள்ள பணத்துக்குப் பலம் எப்படிக் கிடைக்கும்? எண்ணிப் பார்!

ஓட்டுகளைத் தட்டிப் பறிப்பதற்கு காங்கிரசில் குடி புகுந்துள்ள சீமான்கள், பணத்தைக் கொட்டித் தருகிறார்கள். "கட்டி எட்டின மட்டும் பாயும், பணம் பாதாளம் வரை பாயுமே!" என்று இறுமாப்புடன் பேசுகிறார்கள்: ஆனால், தம்பி, இத்தகையவர்கள் ஆட்சியில் அமர்வதால் என்ன நேரிடும் என்பதை நாட்டு மக்கள் எண்ணிப் பார்க்காமலா இருப்பார்கள்?

ஒன்றுக்குப் பத்தாக இதே மக்களிடமிருந்து வரி போட்டு வாங்குவர், வாணிபத்தில் ஈடுபட்டு இலாபம் குவிப்பர். இலட்சம் செலவிட்டால், கோடி குவித்துக் கொள்வர்.

கெண்டையை வீசுகிறார்கள்! எதற்கு? வரால் பிடிக்க!

ஓட்டுக்குப் பணம் வீசுகிறார்கள்! எந்த நோக்கத்துடன்? ஆட்சியில் செல்வாக்குப் பெற்று ஒன்றுக்குப் பத்தாக, அதே ஏழையைக் கசக்கிப் பிழிந்து, சுவைக்கலாம், கொழுக்கலாம என்ற நோக்கத்துடன்.

இப்போதே, ஆட்சியில் அமர்ந்திருப்பவர், போடும் திட்டம் பற்றி எடுத்துக் கூறு.

• • •

நகைகள் ஜாக்கிரதை

வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி

நகை செய்தீர்கள்

தாய்மார்களே!

சர்க்காருக்குத் தங்கம் வேண்டுமாம்

டாட்டா, பிர்லா, டால்மியா,

ராஜா. சர். அழகப்பா

போன்றோரிடம் கேட்கவில்லை.

தாய்மார்களே!

உங்கள் நகைகளைக் கேட்கிறார்.

காங்கிரஸ், நிதி அமைச்சர்!

கூசாமல் கேட்கிறார்! பேசாமல் இருந்தால், சட்டம் வரலாம்!

பொதுத் தேர்தலில் காங்கிரசுக்கு

ஓட்டு அளித்தால்

உங்கள் நகைகளைப் பறிக்கும் திட்டத்துக்கு நீங்களே சம்மதமளித்ததாகப் பொருள்!

தாய்மார்கள் எமக்கே ஓட்டு அளித்தனர், எனவே அவர்களின் நகைகளைப்பறிக்க, எமக்கு உரிமை உண்டு என்று காங்கிரஸ் கட்சி வாதாடும்!

மாட்டுப் பெட்டிக்கு

ஓட்டளிக்காதீர்

பூட்டியுள்ள நகைகளைப்

பறிகொடுக்காதீர்!

தி. மு. கழக அபேட்சகர்களுக்கு ஓட்டு அளியுங்கள்.

பூட்டியுள்ள பொன்னாபரணத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.


இதை எடுத்துக்காட்டு நாட்டு மக்களிடம்—ஓட்டளியுங்கள் பணம் தருகிறோம் என்று பேசும் காங்கிரஸ் கனவான்களை, கண்ணாலே காண்பதே தமக்குக் கேடளிக்கும் என்று, மக்கள் உணருவார்கள்.

• • •

இந்த நம்பிக்கை எனக்கு இருப்பதனால்தான் நான், சகதி நிரம்பிய திடலில் நின்று பேசிக்கொண்டிருந்த போது, சங்கீத விழாவிலே கூடி இருந்த சுகவாசிகளும், மாளிகையிலே கூடியிருந்த சீமான்களும் என் மனக்கண்முன் தெரிந்தபோதிலும், கலங்காமலிருந்தேன். மக்களின் கண்களில் வீசிய நம்பிக்கை ஒளி, உண்மையிலேயே, சீமான் விரலிலே மின்னிடும் வைரத்தின் ஒளியைவிட, உயர்தரமானதல்லவா! ஏழையின இதயத்திலிருந்து கிளம்பி, அவன் கண்களிலே கூத்தாடும் ஒளிக்கு உள்ள பொலிவும், வலிவும், வேறு எங்கு காணமுடியும்—நாம் பெற்றெடுத்த மதலையின் புன்னகையிலும், நமக்கு அந்தச் செல்வத்தை அளித்த சேல்விழியாளின் கண் வீச்சிலுமன்றி!

எனவே தம்பி, நம்பிக்கையுடன் பணியாற்று; நாடு நமது பக்கம் என்பதை அறிந்து பணியாற்று! வெற்றிக்கு வழிகாட்டு.

அண்ணன்,



(6—1—57 திராவிட நாடு இதழில்)


அடுத்த இதழில்

அறிஞர் அண்ணா

அவர்களின்

படமும் பாடமும் (1)

என்ற தம்பிக்கு மடல் இடம்பெறும்.

# அந்தப் பசி அவளுக்கு இல்லையா?

புலவர் அரிமதி-தென்னகன்

பாண்டிச்சேரியைப் பொருத்தவரை பிரஞ்சுக்காரன் செய்துவிட்டுப்போன நன்மைகளில் குறிப்பிடத்தக்கது, மருத்துவ மனையைக் கடற்கரையின் அருகிலேயே அமைத்ததுதான். இல்லாவிட்டால். அரசாங்க மருத்துவமனையில் நீண்ட நாட்களாக இருக்கும் தன் மனைவியைப் பார்த்துப் பார்த்து அலுத்துப்போன சங்கரன் தன் மனக்களைப்பைப் போக்கிக்கொள்ள கடற்கரைக்குப் போகமுடியுமா?

திருமணமான மூன்று மாதங்களிலேயே உடல் நலங்கெட்டு மருத்துவ மனையையே தன் இருப்பிடமாக்கிக்கொண்ட தன் மனைவியால்; தான் கண்ட இன்பக் கனவுகள் எல்லாம் இப்படி அரைகுறையாக முடிந்துவிடும் என்று சங்கரன் எதிர்பார்க்கவில்லை.

'சுவைகண்ட பூனை சும்மா இருக்காது' என்பதுபோல. எந்தெந்த நினைவுகளையோ சுற்றிச் சுற்றி வரும் தன் மனப்பூனையை அடக்க சங்கரன் பட்டபாடு சொல்லி முடியாது.

உருவமற்ற உணர்ச்சிகளாலும், ஓங்கி எழும் நினைவுகளாலும், பிழியப்பட்ட சங்கரனை எப்போதோ படித்த நல்லவரின் கதைகள் தடுத்து, தவறுகள் என்னும் பள்ளங்களில் விழாமல் நிறுத்தின.

அன்று ஞாயிற்றுக்கிழமை.

கடற்கரையில் ஒரே மக்கள் வெள்ளம்; பல வகையான மலர்கள் பூத்துக்கிடக்கும் சோலையாகக் காட்சியளித்தது கடற்கரை. பக்கத்தில் யார் இருக்கிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் கவலைப்படாத இளம் ஜோடிகளும், காதல் புறாக்களும் எதை எதையோ பேசிக்கொண்டு தோளோடு தோள் மோத சென்றனர்.

என்ன கதையோ?
எதைப்பற்றிய பேச்சோ?
ஏன் அந்தச் சிரிப்போ?

கடற்கரைக் காற்று சங்கரன்மேல் நெருப்பை அள்ளிக் கொட்டியது. 'ஹோ' என்று சப்தமிட்ட கடல் அலைகள், 'போ' என்று சொல்வதாகச் சங்கரனுக்குப்பட்டது.

“போய்த்தான் தீரவேண்டும்” சங்கரனின் உள்ளத்தில் எங்கோ இப்படி ஒரு ஒலி எழுந்தது.

“‘இந்த விஷயத்தில் எவன்டா யோக்கியன்” எப்போதோ தன் அனுபவசாலி நண்பன் சொன்னது இப்போது சங்கரனின் உணர்வுக்கு எண்ணெய் போலானது.

வானை நோக்கி மல்லாந்து கடற்கரை மணலில் படுத்துக் கொண்டிருந்த சங்கரன் ஆகாயத்தைப் பார்த்தான். விண்மீன்கள் விட்டு விட்டுப் பிரகாசித்தன. அந்த நட்சத்திரங்கள், கைநீட்டி அழைக்காமல். கண்ணடித்து அழைப்பார்கள்' என்று தான் கண்ட உண்மையைச் சொன்ன வார்த்தைகளை நினைவூட்டின.

ஆமாம்! யாரோ தன்னைக் கண் சிமிட்டி அழைப்பதாகவே கருதினான் சங்கரன்.

உள்ளத்தில் உருவான குறுகுறுப்பும் உடலில் கொந்தளித்த சிலிர்ப்பும் சங்கரனைப் படுக்கவிடவில்லை.

கண்களிரண்டும் விடிவிளக்காக, கட்டழகுமேனி வெட்ட வெளியாக இருந்த இன்ப இரவுகளின் நினைவு சங்கரனை உசுப்பிவிட்டது.

எழுந்திருந்த சங்கரன் தன் ஆடையில் ஒட்டிக்கொண்டிருந்த மணலைத் தட்டி விட்டான். அந்த மணலோடு அவன் மனச்சாட்சியும் சேர்ந்தே விழுந்தது.

“பிறந்தது வாழ, அப்படி வாழும்போது நினைக்கும் இன்பங்களையெல்லாம் அனுபவித்துவிடவேண்டும்; அதற்கு, முறை, நெறி, ஒழுக்கம் என்ற கட்டுப்பாடுகளே இருக்கக் கூடாது; இருந்தால் அதை மதிக்கக் கூடாது” என்னும் அநியாயத் தத்துவ வாதிகள் தன் நண்பர்களாக இருந்ததன் பயனை சங்கரன் இன்று முழுமையாக உணர்ந்தான்.

இல்லாவிட்டால் தன் தேவைக்குரியது எங்கு கிடைக்கும் என்று தான் கேட்க முடியுமா? கேட்டு அலையத்தான் முடியுமா?

'குபேரா லாட்ஜில்' 'இந்த பிசினஸ்' உண்டு என்பது ஊரறிந்த ரகசியம். சங்கரன் நேராக அந்த லாட்ஜில் போய்த்தான் நின்றான். 'இது'பற்றிய விவரங்களையும் முறைகளைப்பற்றியும் தன் நண்பர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டதெல்லாம் சங்கரனுக்கு வேலையை எளிதாக்கின.

ஒரு அறையை வாடகைக்கு எடுத்துக்கொண்ட சங்கரன் ஒரு கதவை மட்டும் திறந்துவைத்தான். அடிக்கொருமுறை யாருடைய வரவை எதிர்பார்த்தானோ அவர் வந்தார். வந்த சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு பொருள் பொதிந்த சிரிப்போடு வந்த ஆள் போய்விட்டான்.

நெருப்பின் மேல் உட்காருவது போலிருந்தது சங்கரனுக்கு. கண்களை வாயிற்படியிலேயே காவலுக்கு நிற்கவைத்துவிட்டான்.

இப்படித்தான் தன் மனைவியைப் பெண் பார்க்கச் செல்லும்போது. மேலும் கீழுமாகக் கண்களை மேயவிட்டுத் தவியாய்த் தவித்தான் சங்கரன்.

மின்னலைப்போல் தோன்றிய இந்த நினைவு. சங்கரனை உலுக்கிவிட்டது.

அந்த நினைவினைத் தொடரவிடாமல் இருப்பதற்காகவே வந்தவளைப் போல ஒரு பெண் உள்ளே நுழைந்தாள். திறந்திருந்த அந்தக் கதவினை மெல்ல மூடித் தாழிட்டாள்.

எத்தனையாவது இரவிற்கோ காத்திருக்கும் சங்கரனுக்கு, அப்போது முதல் இரவின்போது கதவின் ஓரமாக வந்து நின்ற தன் மனைவியின் ஞாபகம் வந்தது.

வரக்கூடாத நினைவு, வரத்தகாத இடத்தில் வந்தது.

மனச்சாட்சி முழுவதுமே சாகாததால் சங்கரனின் உடல் வியர்த்துக் கொட்டியது. மனம் அழுதால் கண்ணீர் வரும்; ஒருவேளை, உடலின் அழுகைதான் கண்ணீராக இருக்குமோ?

வந்தவள் கட்டிலின் ஓரமாக அமர்ந்தாள். கை நடுங்க, கால்கள் ஆட, குனிந்த தலை நிமிராமல் உட்கார்ந்திருந்த சங்கரனைக் கண்டு அவள் சிரிக்கவில்லை.

வேறொருத்தியாக இருந்திருந்தால் சிரித்துதான் இருப்பாள். ஆனால்......அவள் அந்த இனத்திலேயே ஒரு தனி ரகம்.

அவளுக்கு இது பழகிப் போய்விட்ட தொழில்தான். என்றாலும் பாவத்தைச் செய்கிறோம் என்ற உறுத்தல் அவள் உள்ளத்தில் இல்லாமல் இல்லை.

கைக்குட்டையால்தன்முகத்தைத் துடைத்துக் கொண்டான் சங்கரன்.

அவளுக்கு அவனைப்பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

'ஏங்க' அவள்தான் அழைத்தாள். இயற்கை அந்த இடத்தில் மாறுபட்டது.

"ஏன் இப்படிப் பயப்படறிங்க? அதுக்கு இங்கே வராமலேயே இருந்திருக்கலாமே?"

சங்கரன் பேச நினைத்தான்; வரண்ட நாக்கு அசைய மறுத்தது. ஒட்டிய உதடுகள் பிரிய மறுத்தன.

'அதெல்லாம் ஒன்னுமில்லிங்க'

எப்படியோ சங்கரன் பேசி விட்டான்.

அவளுக்கு வேடிக்கையாக இருந்தது. 'ஏய்' இன்னுமே, சரிதான் வாடி; என்னமோ பத்தினியாட்டமா நடிக்கிறியே' என்று பேசியதைக் கேட்டுப் புழக்கப்பட்டுவிட்ட அவளுக்கு 'ங்க' போட்டுப்பேசியது வேடிக்கையாகத்தான் இருந்தது.

"இந்தத் தவறை இன்றைக்குத்தான்..."

அவள் முடிப்பதற்குள் சங்கரன் ஆமாம் என்று தலையசைத்தான்.

"ஐயோ, அந்தப் பாவத்திற்கு நான்தானா முதல் காரணமா இருக்கணும்?"

அவள் உண்மையிலேயே வருந்தினாள்.

சங்கரனுக்கு இது புதுமையாக இருந்தது. ஒருவேளை இவளும்...!!

"நீங்களும் இதுக்குப் புதுசுதானா?"

இல்லை யென்பதுபோல் தலையாட்டினாள் அவள்.

"அப்படின்னா.........பழக்கமான தொழில்தானா?"

"நல்லாக் கேட்டிங்க; இது எனக்குப் பழக்கமான தொழில்தான்,"

சற்றுநேர அமைதி,

அவள் கண்கள் கண்ணீரைக் கொட்டின.

சங்கரனுக்கும் அழவேண்டு போல் இருந்தது, காரணம்... அவனை நினைத்தா? அவளை நினைத்தா? இது அவனுக்கே புரியவில்லை.

"எதை எதையோ பேசி நேரத்தை வீணாக்கிவிட்டேன். பணத்தையும் கொடுத்து நீங்க எதுக்கு நேரத்தை வீணாக்க வேண்டும்.?"

தன் தொழிலில் கவனமாக இருப்பதைக் காட்டிக்கொள்ள சங்கரன் புரிந்துகொள்ள அவள் படாதபாடு பட்டாள்.

காசு வாங்கிவிட்டோம் என்ற எண்ணத்தில் சங்கரனை 'அதற்காக' அவள் அழைத்தாலும், சங்கரன் தானாகப் போய்விடமாட்டானா என்றுதான் அவள் நினைத்தாள்.

அவனால் போகவும் முடியவில்லை இருக்கவும் முடியவில்லை.

"வந்ததே வந்தாய், வீணாகத் திரும்பாதே; ஒவ்வொரு நாளும் பசி பசி என்று துடிப்பதைவிட, இன்று ஒரு நாளாவது பசியைத் தீர்த்துக் கொள்.

வெளியே இருந்துகொண்டு இங்கே வரவேண்டும் எனத்துடிதுடித்தாயே, இங்கேயே இருந்துகொண்டு வெளியில் இருக்கும் மனைவியை நினைக்கதே"

சங்கரன் மனம் போர்க்களமானது மனச்சாட்சிக்கும் உடற்பசிக்கும் நடைபெற்ற அந்தப் போராட்டத்தில் பசிதான் வென்றது.

ஆனாலும்...

"பசி எடுத்தால் எதை வேண்டுமானாலும் சாப்பிடலாமா?" என்ற கேள்விமட்டும் அவன் மனதில் சற்று நிமிர்ந்தே நின்றது.

"ஏன்ஒருமாதிரியா ஆயிட்டிங்க"

"ஒன்னும் இல்லே; என் மனைவி..."

"இந்த நேரத்திலும் உங்களுக்கு மனைவியை மறக்க முடியவில்லையே, பின் எதற்காக..." அவள் முடிக்கவில்லை.

"எத்தனை நாளைக்குத்தான் இப்படி சந்நியாசியாக இருக்க முடியும்? அவள் உடம்பு சுகமில்லாம மாதக்கணக்கா ஆஸ்பத்திரியிலேயே இருந்தா?

எனக்கு அந்த உணர்வு இருக்கே! நானும் மனிதன் தானே!!

தான் செய்ய நினைக்கும் தவறுக்கு எதைச் சமாதானமாகத் தனக்குத்தானே சொல்லிக் கொண்டானோ, அதே சமாதானத்தையும் அவளிடம் சொன்னான்.

"உடம்பு சுகமில்லாம உங்க மனைவி இருக்கிறதால், உங்க பசியைப் போக்கிக்கொள்ள இங்கே வந்துவிட்டிங்க; அவசியமாவும் படுது; இந்த உங்ககாரியம் நியாயம்னுகூட நினைக்கிறிங்க. இல்லையா?"

"ஆமாம்" சங்கரனின் பதில் அவளுடைய உள்ளத்தில் ஏதோ ஒரு பிரளயத்தை உருவாக்கிவிட்டது.

அப்படின்னா, மாதக்கணக்கா உடம்பு சுகமில்லாம நீங்க இருந்தா உங்களால அடக்கிக்கொள்ள முடியாத பசி...அதே உடற்பசி உங்க மனைவிக்கும் ஏற்பட்டா......

அவளுக்கு அந்த உணர்வு இருக்கே?

அவளும் ஒரு மனிதப் பிறவி தானே?

அவள் முடிக்கவில்லை.

"போதும்......போதும்" சங்கரன் துடித்தான்.

"உங்க தவறுக்கு நீங்க சொல்ற சமாதானத்தை உங்க மனைவி விஷயத்திலுப் ஏற்றுக்கொள்விங்களா?"

"ஐயோ..."

சங்கரன் அலறினான். துண்டிக்கப்பட்ட பல்லியின் வால்போல் அவன் உள்ளம் துடித்தது.

குனிந்திருந்த தலையை நிமிர்த்திப் பார்த்தாள் அவள்.

அவன் அங்கு இல்லை.

புராணத்தில், இறைவன் பக்தனைத் தடுத்தாட்கொண்டதுபோல் சங்கரனை அவள் தடுத்தாட்கொண்டாள்.

சங்கரனைப் பொறுத்தவரை அவள் ஒரு தெய்வந்தான்.

★

### எலிகளுக்கும் சிகரெட்!

புற்றுநோய் ஆபத்து பெரும் அளவில் ஏற்படுகிறது என்பதற்காக "சிகரெட் புகையாதீர்" என்ற குரல் பலப்பட்டு வரும் நாளல்லவா இது. இந்த நாளில், எலிகளைப் பிடித்து, சிகரெட் பிடிக்கப் பழக்கப்படுத்துவதென்றால்—ஒண்ணாம் நம்பர் குறும்புத்தனம் என்றுதானே சொல்லத் தோன்றுகிறது! ஹாம்பர்க் நகரத்தில் 150 எலிகளுக்கு இவ்வாறு பழக்கப்படுத்துகிறார்களாம்! ஒவ்வொரு எலியும் நாளொன்றுக்கு 80 சிகரெட்டுகளைப் புகைத்து தள்ளுகின்றனவாம்!! ஏன் தெரியுமா? மனிதர்களது சுவாசக் குழாய்க்கும், எலிகளது சுவாசக் குழாய்க்கும் ஒற்றுமைகண்ட விஞ்ஞானிகள், புகைபிடித்தால் புற்றுநோய் நிச்சயம் "என்பதை நிரூபிக்க இந்த சோதனையைச் செய்திருக்கிறார்கள்; மேலே குறிப்பிட்ட எல்லா எலிகளுக்கும் இப்போது புற்றுநோய் பற்றிக் கொண்டு விட்டதாம்! நீங்கள் புகை பிடிப்பவரா? புற்றுநோய்க்கு நீங்கள் ஆளாகப்போகிறீர்களா?

# புண்ணுக்குப் பூசிய புனுகல்லவே.........?

—புலவர் கோ. அண்ணுமலை

> **கவனிக்க......**
>
> குடியரசுத் தலைவர் தேர்தலில் பிரதமரின் நிலைபற்றி இக்கட்டுரையாளர் ஆராய்கிருர். கருத்து, முற்றிலும் கட்டுரையாளருக்குத்தான் சொந்தம். நாடும் அறிந்து கொள்ளட்டுமே என்பதற்காகவே வெளியிட்டிருக்கிருேம்! —ஆசிரியர்.

மக்களாட்சி முறையில் நாம் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டிய தீங்குகளில் ஒன்று 'கட்சி அரசியல்' மக்களாட்சி வேண்டுமென்று விரும்புகிறபோது கட்சிகளின் அரசியலையும் ஏற்றுக் கொள்ள வேண்டியதிருக்கிறது. இந்த அரசியல் கட்சிகள் தங்களுடைய நன்மைகளைச் சில விதி முறைகளை வகுத்துக்கொண்டு இயங்கத் தொடங்குகின்றன. இந்த விதி முறைகளைக் காத்து நெறிமுறை வழுவாமல் நடப்பதைக் கட்சிக் 'கட்டுப்பாடு' என்கிருர்கள். ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் இந்தக் 'கட்டுப்பாடு' தான் உயிர். அதன் கொள்கைகள்கூட கால மாறுதலுக்கேற்ப மாறக் கூடியவை. ஆனுல் 'கட்டுப்பாடு' அப்படியல்ல. 'கட்டுப்பாடு' இல்லாவிட்டால், அந்தக் கட்சி உடனே கலகலத்து உயிரிழக்கும் நிலை ஏற்படும். கட்டுப்பாடின்மை எனும் நோய்பரவினுல் உடனே அந்தக் கட்சியின் உயிருக்கு ஆபத்து வரும். பெரும்பாலும் அது கட்சியின் மரணத்தில் வந்து முடியும்.

இந்தியப் பெருங்கண்டத்தின் தனிப்பெருங் கட்சியாக விளங்கும் காங்கிரஸ் கட்சிக்கு இந்த மரண ஆபத்து ஏற்பட இருந்தது; அது தவிர்க்கப்பட்டுவிட்டது.

நாட்டு நலத்திலே அக்கறை கொண்டவர்கள் எல்லோருக்கும் மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கும். அது நியாயமான மகிழ்ச்சிதான் என்ருலும் அந்தக் கட்சிக்கு ஏற்பட இருந்த மரண ஆபத்தையும் அது தொடர்பான சிலபல கருத்து அறிவிப்புக்களையும், மிகப் பெரும் பொறுப்பிலே இருப்பவர்கள் கொடுத்த வாக்கு மூலங்களையும், நடந்துகொண்ட நடைமுறைகளை எண்ணிப் பார்க்கிற யாரும் கவலை கொள்ளாதிருக்க முடியாது.

எவ்வளவு பெரும் பொறுப்பிலே இருந்தாலும், எத்தனைதான் மகத்தான மனிதர்கள் இவர்கள் என்று எளிய பாமரமக்கள் முன்னுல் மற்றவர்களால் புகழப்பட்டாலும், சில வேளைகளில் அந்த மகத்தான மனிதர்களின் 'உள்மனம்' எவ்வளவு இழிவாகக்—கீழ்த்தரமாக இருக்கிறது என்பதை அறியும் சந்தர்ப்பங்கள் வந்தேவிடுகின்றன.

இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலைகளில் மிகப் பெரும்பாலோர் 'நாட்டின் நலம்' என்று ஒன்று இருப்பதையே மறந்துவிடுவதைக் காண்கிருேம். 'நம்முடைய நிலை என்ன?' 'நாம் யாராக இருக்க வேண்டும்' என்பதிலே, மிகப்பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர்களுக்கு இருக்கும் கவனத்தில் நூற்றில் ஒருபங்கு, 'நாட்டின் நலம்' நம்முடைய சுயநல வேட்டையால் எப்படிப் பாதிக்கப்படும் என்பதிலே இருப்பதாகத் தெரியவில்லை. "நாடு எக்கேடும் கெட்டுப் போகட்டும்; நான் இன்னுராக இருக்கவேண்டும், "நான் இப்படி இருந்தால்தான் இருப்பேன்—இல்லாவிட்டால் வேறு எப்படியும் இருக்கமாட்டேன்—வேண்டுமானுல் களத்திலே இறங்கிப் பாருங்கள்!" என்கிற வகையில் நாம் யாரையெல்லாம் பதவிக்கு ஆசைப்படாதவர்கள் என்று எண்ணிருேமோ அவர்கள் வாயிலிருந்து வரக்கேட்டோம்;

இத்தகைய பதவி வேட்டைக்காரர்களால், சுயநலத்துக்கு எண்ணற்ற கோடி மக்களின் நலம் பலியிடப்படும் ஆபத்து என்ருலும் அஞ்சாமல் வரவேற்கும் அரக்க குணம் படைத்தோரால் இன்றைக்கு நாடு ஆட்டிப் படைக்கப் படுகிறது.

மக்களாட்சி நிலவும் நாட்டில் இந்தக் கொடுமைகள் கண்டுயாரும் அஞ்சத் தேவையில்லை என்ருலும், கடந்த கிழமைகளில் நடைபெற்ற அரசியல் சூதாட்டம் தனியொரு கட்சியின் வாழ்வு தாழ்வைப் பொறுத்துதான் என்ருலும், இத்தகைய மன ஆரோக்கியமில்லாத மனிதர்களைத் தவிர அரசியலுக்கு உள்ளபடியே தியாகமும் நேர்மையும் கொண்டவர்கள் வரவேமாட்டார்களா என்ற ஏக்கத்தைக் கடந்த கிழமைகளில் நடைபெற்ற அரசியல் சண்டைகளும், குடியரசுத் தலைவர் தேர்தலும் ஏற்படுத்தியுள்ளன.

குடியரசுத் தலைவர் தேர்தல் முடிந்துவிட்டது. திரு. கிரி குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டார். நம்முடைய நிலை ஆரம்பமுதலே தெளிவாக்க பட்டு வந்துள்ளது. திராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரசின் அதிகாரப் பூர்வமான வேட்பாளரை எதிர்த்துப் போட்டியிட்ட கிரியை ஆதரித்து வெற்றிபெறச் செய்வதிலே மகிழ்ச்சியடைந்துள்ளது. இது முடிந்து போன விவகாரம்.

திரு. கிரி வெற்றி பெறுவதற்குத் திருமதி இந்திரா ஆதரவு திரட்டியது இருக்கிறதே அதுபற்றித்தான் நாம் கட்சி அரசியலில் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நடவடிக்கையா எனக் கேட்க விரும்புகிருேம்! கிரி வெற்றி பெற்றதற்கும் இதற்கும் சம்பந்தம் இருக்கிறது. கிரியின் வெற்றியை வரவேற்கிறவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்கக் கூடாது தான், கேட்டால் கிரியின் வெற்றியில் உங்களுக்கு மகிழ்வில்லையா என்று கேட்டுவிடத் தோன்றும். ஆனுல் கிரியின் வெற்றி என்பதும் அதனை விரும்பி வரவேற்பது என்பதும் வேறு; திருமதி இந்திரா தன் சொந்தக் கட்சியின் அதிகாரப் பூர்வமான வேட்பாளரைத் தோற்கடிப்பது என்பது வேறு.

இங்கே திரு. கிரிக்கும் திரு. ரெட்டிக்கும் இருக்கும் எண்ணற்ற ஏற்றத் தாழ்வுகளைப் பற்றிய வாதங்களை மறந்து, ஒரு கட்சியின் வேட்பாளரைத் தோற்கடிப்பதற்கு அதே கட்சியின் பெயரால் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டது நியாயமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

பெங்களூரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் இந்திரா உள்பட எல்லாக் காங்கிரஸ் பெரியவர்களும் கலந்து கொண்டார்கள். திரு. காமராசர் பெயரிலிருந்து இந்திராவின் பெயர் வரையில் எல்லாக் காங்கிரஸ் மேலிடத்தவர் பெயரையும் 'இந்தியக் குடியரசுத் தலைவர்' என்னும் பெரும் பதவியுடன் இணைத்து இணைத்துப் பார்த்து முடிவில் திரு. ரெட்டியின் பெயரைக் காங்கிரஸ் வெளியிட்டது. திரு. ரெட்டியின் பெயரைச் சொன்னபோது திருமதி

(15-ம் பக்கம் பார்க்க)



# எந்தப் பெருமை கிடைக்குமோ?

அன்புள்ள நண்பா!

உனக்கு நிரம்பவும் வேலை தரவேண்டியிருக்கிறது. இது காந்தியடிகள் பிறந்த 100-வது ஆண்டு என்பதை நாள்தோறும் ஏடுகளும், இதழ்களும், வானொலி நிலையங்களும், போட்டி போட்டுக்கொண்டு நினைவு படுத்திக்கொண்டே இருக்கின்றன,

காந்தியடிகளுக்கு விழாவெடுக்கிறோமே—ஏன்? என்று நினைத்துப்பார்ப்பவர்களால், அல்லது பார்க்க மறுப்பவர்களால் எழுப்பப்படுகிற அரசியல் கூச்சல்கள் ஒருபக்கம், அந்த விழாபற்றிய நினைவை மேலுக்குக் கொண்டு வருகின்றன.

காங்கிரஸ் என்ற ஒரு இயக்கம் தோற்றுவிக்கப் பெற்று—பின்னாளில் அது இந்திய சுதந்திரத்திற்குப் பாடுபடும் அரசியல் நோக்கமுடையதாய் மாற்றியமைக்கப்பட்ட போதில்—அதன் எல்லா இலட்சியங்களின் கூட்டாக 'இந்திய சுதந்திரம்' ஒன்றே என்றே இயங்கி வந்தது. சுதந்திரம் கிடைத்தது—என்ற நிலை நாட்டில் ஏற்பட்டபோது, காங்கிரஸ் கட்சி, தன் இலட்சியத்தை அடைந்துவிட்டது என்றுதான் கூறவேண்டியிருந்தது.

ஒரு அரசியல் கட்சி தன் இலட்சியத்தில் வெற்றி பெற்றுவிட்டது என்றான பிறகு, அதற்கு அரசியல் அரங்கில் வேலையேதுமிருப்பதில்லை, இதனை உணர்ந்து தான், யாருக்கு விழாவெடுத்துக் கொண்டிருக்கிறோமோ, அந்த காந்தியடிகள்

''காங்கிரசைக் கலைத்துவிட வேண்டும்''

என்று சுதந்திரம் பெற்றவுடனேயே சொல்லிவைத்தார்.

பெற்ற சுதந்திரத்தின் பயனைத்துய்த்திட வேண்டும் என்று அடுத்ததாக மேற்கொண்ட காங்கிரசின் இலட்சியம், இன்றைக்கு எவ்வளவு கீழான நடைமுறைகளைப் படைத்துவிட்டிருக்கிறது என்பதனை எண்ணிப் பெருமூச்சுக்களை உருக்க வேண்டியிருக்கிறது! நல்லவர்கள் பொறுமுகிறார்கள்! கண்ணீர் வடிக்கிறார்கள்! கதறியழுகிறார்கள்!

காந்தியடிகள் விரும்பியதுபோல், காங்
கிரசுக்கட்சியினைக் கலைத்துவிடவேண்டும் என்று
போர்ப்பறை கொட்டத் தொடங்கியிருக்கிறார்கள்,

உண்மைதான் நண்பா! பெங்களூர் நகரம், இவ்வளவு சிறப்புக் குரிய இடத்தைப் பெறும் என்று, அன்று எவரும் எண்ணிக்கூடப் பார்த்திருக்க முடியாதே!

"ஜஸ்டிஸ் கட்சி'' என்ற பெயர் மாறி ''திராவிடர் கழகம்'' என்று சிறக்க வைத்தப் பெருமையினை எப்படி திருவாரூர் நகரம் பெற்றுக்கொண்டிருக்கிறதோ, அது போலவே, ''காங்கிரசினைக் கலைத்துவிட்டோம்'' என்று கூறுவதற்கான வாய்ப்பினைத் தந்து அதற்கான புகழினைப் பறித்துக்கொண்டுவிட்டிருக்கிறது பெங்களூர். 'வாழ்க பெங்களூர்' என்று கூறலாம் போலத் தோன்றுகிறது! தமிழ் நாடு, மதுவிலக்குப் பகுதியாக இருப்பதனால், அப்படிச் சொல்லத் தயக்கம் மேற்படுகிறது— ''வேறு பொருள்'' கொண்டுவிட்டால் என்ன செய்வது என்று!

குடியரசுத் தலைவருக்கான வேட்பாளர் தேர்வு என்று தொடங்கி, மொரார்ஜியின் கர்வ பங்கம் என்று நடந்து, செய்தவற்றுக்குச் சமாதானம் தேவை என்றாகி, நீயா? நானா? என்ற வலிமைப் போட்டியில் சிக்கி, யாருடைய வலிவையும் பொலிவையும் குன்றச் செய்து குறைத்துவிட முடியும் என்று கனவு கண்டார்களோ, அது நடைபெற முடியாதது என்று உணர்ந்து, கால்களில் விழுந்து மன்னிப்புக் கேட்பதைப்போல், ''இரு தரப்பிலும் குற்றம் செய்திருக்கிறோம்; யாரும் யார்மீதும் நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை'' என்று சமாதானம் கூறிவிட்டு, அவரவரும், ஆளுக்கொரு பக்கம் ஓய்வெடுக்கவும் போய்விட்டிருக்கிறார்கள் — என்பது காங்கிரசின் இன்றைய அரசியல் சூழ்நிலை.

மூத்த தலைவர்கள் என்று கருதப்படுகிற சிலர், காங்கிரசுக் கட்சி பிளவுபடக் கூடாது; அது விபரீத விளைவுகளை விளைக்கும் என்று உணர்ந்துதான் ''யார் மீதும் நடவடிக்கை தேவையில்லை—நடந்தது நடந்ததாக இருக்கட்டும்; இனி, நடப்பவை நல்லதாக இருக்கட்டும்'' என்கிற முறையில் தீர்மானத்தைப் போட்டுவிட்டுக் கலைந்து ஓய்வெடுக்கப் போனார்கள்.

ஒரு அரசியல் கட்சி என்கிறபோது, ஏழெட்டுத் தலைவர்கள் மட்டுமே கட்சியாக இருந்துச் செயல்பட்டுவிட முடியாது; கட்சியின் தொண்டர்கள், ஊழியர்கள் இவர்களது கூட்டுப் பணியில், தலைவர்களது ஆணையும், வழி நடத்தலும் சேர்ந்துதான் கட்சியைப் பிழைக்க வைத்துக் கொண்டிருக்கக் கூடியதாகும்.

இந்த இலக்கணப்படி, காங்கிரஸ் கட்சியை வழி நடத்திச் செல்வோர்; அதன் தலைவர்கள். நடந்து செல்வோர் தொண்டர்கள். தொண்டர்களே இல்லாமல், யாரை வழிநடத்திச் செல்ல முடியும்? அதனால் தொண்டர்கள் மதிக்கப்பட வேண்டும்.

ஆனால் நண்பா, தலைவர் என்று ஒருவரை யேற்றுக் கொண்ட பின்பு, அவரது ஆணைக்கு அடங்கி, வழி நடந்து செல்லும் கடமை, நிச்சயம் தொண்டனுக்கு உண்டு. மாறுபட்டக் கருத்துக்கள் எதுவானாலும், அதனை, அதற்குரிய இடத்திலே எடுத்துக் காட்டி, தேவையான மாறுதல்களைக் காண முயலவேண்டுமே

ஒழிய, ஏட்டிலும், எழுத்திலும், மேடையிலும், தன் கருத்து வேற்றுமையைக் கொட்டிக் காட்டி குழப்ப மேற்படுத்த ஒருவன் முயலுவானானால், அவன் உண்மைத் தொண்டனாக இருக்க முடியாது.

> கருத்து மாறுபாடுகளை உரிய இடத்தில் எடுத்துக் காட்டி, அவற்றிற்கு நீதி கிடைக்கவில்லை யென்று மனதார நம்பினால்—உண்மைத் தொண்டன் ஒருவன் அடுத்துச் செய்ய வேண்டுவது கட்சியை விட்டு வெளியேறி வந்து, தன் கருத்துக்குப் பிறரிடத்தில் வலிமை சேர்க்க வேண்டும்.

இதுதான் ஒழுக்க நெறிக்குட்பட்ட ஜனநாயகப் பண்புக்கு எடுத்துக்காட்டாக இருக்கும். ஒரு வரலாற்றினைப் படைத்த வரலாற்றுத் தலைவனாக ஆகும் சிறப்பினைப் பெறமுடியும்,

காங்கிரசுக் கட்சியினைக் கலைத்து விடக்கூடாது என்றோ, பிளவுண்டுபோக விடக்கூடாது என்றோ கருதியதாலேற்பட்ட விளைவுகள், காங்கிரசை இன்று தற்காலிகமாகக் காப்பாற்றித் தந்தாலும், சில காங்கிரசுக்காரர்களது பேச்சும், எழுத்தும்,

> காங்கிரஸ் கட்சி, கலைக்கப்பட்டு விடவேண்டும்.

என்ற பொருளை உள்ளடக்கியதாகவே இருக்கக் காணும்போது, வருத்தமேற்படத்தான் செய்கிறது. தலைவனைமீறிய தொண்டரின்செயலாகவே தெரிகிறது.

''யார்மீதும் நடவடிக்கை வேண்டாம்; இனி ஒற்றுமையாக இருப்போம்''—என்று சூடமேற்றி வைத்துச் சூள் எடுத்துக்கொண்ட பிறகு—

> மொரார்ஜியின் விவகாரம் தீர்ந்துவிடவில்லை என்று நிஜலிங்கப்பா அறிக்கைக் கொடுத்திருக்கிறார்.
>
> ஆட்சித் தலைவரை, கட்சித் தலைவர் கட்டுப்படுத்தக்கூடாது என்று பிரதமர் பேசுகிறார்.
>
> பிரதமரை, பதவியைவிட்டு விலக்கியே தீரவேண்டும் என்று தாரகேசுவரி சின்கா குரல் கொடுக்கிறார்.
>
> பிரதமரை எதிர்ப்போர், நாடாளுமன்றத்தில் தனிக்குழுவாக இயங்குவது என்று முடிவெடுக்கிறார்கள்.

இவையெல்லாம் ஒருவகையில் கட்சியின் மேல்மட்ட விவகாரங்களாகும். என்ன நடக்கிறது என்று கவலையுடன் கவனித்துக்கொண்டிருப்பதுதான் உண்மையான கட்சிக்காரன் ஒருவனது வேலையாகும்.

> தமிழகத்தில், இந்தக் கட்சித் தொண்டர்கள், காங்கிரசைக் கலைத்து விடுங்கள்; அல்லது பிளவு படுத்துங் என்று குரல் கொடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

அ. இ. கா. க. வின் தீர்மானம் கட்சி பிளவுபட்டு விடக்கூடாது என்ற நிலையில் தோற்றுவிக்கப்பட்டிருக்கும்போது, தமிழக காங்கிரஸ் ஏடுகள், அந்த தீர்மானத்தை வைத்துக்கொண்டு, அக்குவேறு, ஆணி வேறாக அலசி ஆராயத் தொடங்கி இருப்பதன்மூலம்,

> காங்கிரஸ் தலைமைக்கு மாறாக, கட்சி ஊழியர்கள் இயங்கும் வகையில், பிரச்னையினை திசை திருப்பிவிட்டு கருத்து வேறுபாடுகளைப் பெரிதுபடுத்தி கட்சிக்குள்ளே புகைச்சலையும், பூசலையும் உண்டாக்கும் விதத்தில் செயல்படுகிறார்கள்.

''கட்சிக்குள்ளே ஒற்றுமை தேவை'' என்ற நிலையேற்பட்ட சூழ்நிலையில், அ. இ. கா. க. இதனைவிட வேறு எந்த முடிவுக்கும் வந்திருக்க முடியாது.

தமிழக காங்கிரஸ் ஏடுகளுக்கு, நேருவின் பரம்பரை பற்றி தெரியாதென்றால் அதில் வியப்பேதுமில்லை. எங்கோ அடித்த புயலால், எப்படியோ ஒதுங்கிக் கொண்ட இடம் காங்கிரஸ் என்பதால், காங்கிரஸ் வரலாறு முழுதாக அவர்களுக்குத் தெரியும் என்று நம்பமுடியவில்லைதான்.

திராவிட முன்னேற்றக் கழகம், ஒரு அரசியல் கட்சி என்கிறபோது, அரசியல் களத்தில் காங்கிரசுக் கட்சியினை எதிர்க்கிற கடமையுண்டு; உரிமையும் உண்டு. காங்கிரசுக் கட்சி வலிமை பொருந்தியதாக இருந்து அதனை வீழ்த்தி வெற்றி காண்பதுதான் தி. மு. க. வுக்குப் பெருமை என்று மாண்புமிகு முதலமைச்சரே கூட சுட்டிக் காட்டி இருக்கிறார்.

ஆனால், காங்கிரசைப் பிளந்து வைத்து, பிடுங்கியவரையில் லாபம் என்று, பிணந்தின்னும் கழுகுகள் வட்டமிடுவதனை, அரசியல் கண்ணோட்டத்தில் சரியான நடைமுறை என்பதனை ஏற்றுக்கொள்ளமுடியாது.

> பிரதமர் மீது நடவடிக்கை எடுத்து அவரைத் துரத்திவிட்டுவிட்டு அந்த இடத்தில் காமராசரை வைக்கவேண்டும்.

என்று நைப்பாசை வந்துவிட்டதோ என்னவோ அந்த ஏடுகளுக்கு.

> காமராசர் தவறிழைத்துவிட்டிருக்கிறார்—சோஷலிசச் சக்திக்கு எதிராகச் செயல்பட்டு வருகிறார்.

என்பதனை இங்குள்ள காமராசர் ஆதரவாளர்கள் உணர்ந்து கொள்ளத் தவறியதே, இதுபோன்ற அற்பத்தனமான ஆசைகளைப் படைத்துக் கொண்டு, அதற்கேற்ற வகையில் ஏடுகளையும், எழுத்துக்களையும் மாற்றிக்கொண்டு விட்டிருப்பதற்குக் காரணமாகும்.

மொரார்ஜி விவகாரம் முற்றுப்பெற்றதா, இல்லையா? பிரதமருக்குள்ள அதிகார வரம்பு யாது? கட்சித்தலைவர் எந்த அளவுக்குப் பிரதமரை அடக்கியாள முடியும்? என்பதை யெல்லாம் முடிவுக்குக் கொண்டு வரும் ஆற்றலும், உரிமையும் பெற்றவை காங்கிரஸ் செயற்குழுவே தவிர, தமிழகக் காங்கிரஸ் நாளேடுகள் அல்ல!

> தமிழக நாளேடுகள், கட்சியினைப் பிளவு படுத்தும் போக்கிலே செயல்படுவதனைத் தடுக்கும் வகையில் த. நா. கா. தலைவர் சுப்பிரமணியம் நடவடிக்கை எடுக்க வேண்டும்; இன்றேல், தலைவர் பதவியைத் துறந்துவிட்டு, கொங்கு நாடு போய் விடுவது மேல்.

காங்கிரஸ்காரர்களுக்கு வராத ஆத்திரம், நமக்கு வருவதற்குக் காரணம் நாம் அடுத்த 72ல், பலமான ஒரு எதிர்க் கட்சியை எதிர்க்க வேண்டும்! என்ற ஆசையால்தான்!

எது நடக்கப் போகிறது? காங்கிரசைப் பிளவு படுத்திய பெருமை பெங்களூருக்குக் கிடைக்கப் போகிறதா? தலைவர் சுப்பிரமணியத்தை பதவி துறக்கச் செய்த புகழை அடையப் போகிறதா? பொறுத்துத்தான் பார்க்க வேண்டும்,

அன்புள்ள,

**திருவாரூர் முத்துராமன்**

# இந்தியா ஆள்வது?

வரலாற்றில் புத்தாட்சி பிறந்ததடா; ஈண்டு
வளமான பலசெல்வங் கொள்ளைவிட லாமோ?
தரமான பேரறிஞன் ஆளுகைக்குட் பட்டோம்;
தமிழ்காப்போம்; தமிழ்நாட்டுத் தன்மானம் காப்போம்;
இரவகற்றிச் செங்கதிரோன் எழுந்தான்கீழ்த் திசையில்!
இன்னலவை, கன்னலதாய் மாறுவதும் கண்டாய்!
புரட்சியொன்று தேவையடா புன்மைநிலை மாள;
புறையற்ற பொதுவுலகிற் றமிழொன்றே யாள!
எந்தமிழர் வாழ்வுக்கே யிழைத்திட்டார் தீமை;
இனிப்பொறுத்தல் நன்றாமோ? எழுந்திடுவீர் இன்னே!
சங்கமுறு தமிழ்நாட்டில் தமிழாட்சி காண்போம்;
திறங்கெட்ட வடபுலத்தார் புறங்காட்டச் செய்வோம்;
சிங்கத்தின் குகையினிலா சிறுநரியின் கூட்டம்?
சீறியெழின் என்னாகும் என்புகளே மிஞ்சும்!
இந்தியதா ஆள்வதுநம் செந்தமிழர் நாட்டை?
இந்தநிலை வரவிடுதல் நந்தமிழர்க் காமோ?

—செ. பாலசுந்தரம்

# வரமருள்வாய்!

கொச்சைத் தமிழை யான்விடுத்து—வாழ்
கொஞ்சும் தமிழில் கவிபாட
இச்சைக் கொண்டேன் இவ்வுலகில் — எங்கும்
இயங்கித் திரிவேன் உயிராகப்
பச்சைக் கிளிபோல் பலதிசையும்—வேண்டி
பறந்தே இயற்கை நான் காண்பேன்
பிச்சை ஏற்றேன் தமிழ்மாதே—உன்னைப்
பாட வரமே நீயருள் வாய்,

—தி. து. சீரங்கராஜன்

# இளம் பிறை

இளம்பையன் கரும்பலகை தான் எடுத்தே
ஏதேதோ எண்ணிஎண்ணி முடிவாய் வந்து
வளைத்தெழுதி வைத்ததொரு சிறிய கோடோ?
மங்கையவள் நீலவிழி தன்னில் பூத்துத்
தளிர்த்தெழுந்த கடைவிழியின் அமுதம் தானோ?
தண்முல்லைப் புன்சிரிப்போ? திங்கள் அன்னை
வளர்த்துவரும் எழில்மிகுந்த பிள்ளை தானோ?
வளர்பிறை! நீ நிறையுமுன்னே நிறைந்த துள்ளம்!

அழுக்கடைந்த உள்ளத்தில் அலர்ந்தெழுந்த
அருந்தமிழின் குறள்தானோ? வெற்றி வாளோ?
எழுத்தறிவே இல்லாத உள்ள மீதில்
ஏற்றிவரும் ஆரம்பக் கல்வி தானோ?
செழுங்கடலில் சுழன்றுவரும் வாளை மீனோ?
திமிர்பிடித்த களிறொடித்துக் காட்டில் விட்ட
அழகியதோர் தந்தத்தின் வளைந்த துண்டோ?
அரும்பிறை! நீ நிறையுமுன்னே நிறைந்த துள்ளம்!

காளையவன் கைப்பிடித்து இழுக்கும் போது
கடக்கென்றே உடைந்தமுத்து வளையல்துண்டோ
தோளினிலே தூக்கையிலே துவண்டு விட்ட
தூயதொரு பொற்கொடியோ? தமிழ்மா நாட்டு
நாளினிலே உணர்வில்லா மக்கள் நெஞ்சில்
நாளேற முளைக்குமொரு உணர்வின் வித்தோ?
தாளாத கவலைஎலாம் பறந்த தின்றே!
தனிப்பிறை' நீ நிறையுமுன்னே நிறைந்த துள்ளம்!

—மா. ஆறுமுகம்

12-ம் பக்கத் தொடர்ச்சி

காந்தி அங்கேயே இருந்திருக்கிறார். திருமதி. இந்திரா அந்த இடத்திலேயே மறுத்துச் சொல்லியிருக்க வேண்டும். இதுதான் பண்புள்ள அரசியல் ஜனநாயகம்; அதை விட்டு திரு. ரெட்டியின் வேட்புமனுவில் கூடக் கையொப்பமிட்டுக் கொடுத்துவிட்டுப் பிறகு கிரிக்கு ஆதரவு திரட்டிக் கொடுத்ததை எப்படி நாம் நற்பண்பு' என்று எடுத்துக் கொள்வது? இது எப்படி அரசியல் நேர்மை ஆகும்? இது எப்படி எதிர்காலத்தில் கட்சி அரசியலுக்கு நப்பிக்கையூட்டும்?

ஒரு கட்சியில் சரியோ தவறோ ஒரு முடிவு எடுத்தபின் அதை ஏற்றுக் கொள்வதுதான் நியாயம் என்று பேங்குகளைத் தேசிய மயமாக்கியதிலே வாதிடும் திருமதி இந்திரா, அதே கட்சி முடிவு செய்த ஒரு வேட்பாளரைத் தோற்கடிக்கத் தாம் மேற்கொண்ட நடவடிக்கைகள் அனைத்தும் அக்கட்சிக்குத் தாம் செய்த துரோகமல்லவென எப்படிக் கருதுகிறார் என்பது யாருக்கும் எளிதில் புலப்படுவதாயில்லை. மிகப் பெரிய இடத்துக்குப் போய்விட்டபின் இப்படித்தான் மிகமிக எளிய அடிப்படை உண்மைகளைக் கூட மறுக்கத் துணிந்து விடுகிறார்கள்.

தன் கட்சி மேற்கொள்ளும் முடிவில் நேரடியான தொடர்பும் பொறுப்பும் தனக்கு இருந்திருக்கும் போது அந்த முடிவு எடுக்கப்படும் போதும், எடுத்தபின்னும் மறுத்துரைக்கத் தெம்பில்லாமல் பிறகு திரண்ட தெம்பினைக் கொண்டு கட்சியை அவமானப் படுத்தியிருப்பது திருமதி இந்திராவின் 'பின்புத்தியைக்' காட்டுகிறது. இப்படிப்பட்ட 'பின்புத்தி' படைத்தவர்களிடத்தில் இனிக் காங்கிரஸ் மட்டுமல்ல ஒவ்வொரு அரசியல் கட்சியும் தனக்கு வாய்ப்பு வரும்போது 'நாட்டின் நலத்'தை அடகு வைக்காமல் இருக்கவேண்டும் என்று வேண்டிக் கொள்வதற்காகவே இதனை எழுதலானோம்.

தனிப்பட்டவர்களின் விருப்பு வெறுப்புகள் ஒரு பழம்பெரும் அரசியல் கட்சியின் ஆயுட் காலத்தை நிர்ணயிக்கும் ஆற்றல் பெற்றவையாக மாறும்போது, அந்த அரசியல் கட்சியின் கையிலகப்படும் நாடு என்ன பாடுபடும் என்று எண்ணிப் பார்க்கவே நமக்கு அச்சமாயிருக்கிறது.

நமக்குச் சொந்த விருப்பு வெறுப்புகள் ஆயிரமிருக்கலாம். நம்முடைய பெருமையும் சிறுமையும் கூடலாம் குறையலாம். ஆனால் 'நாட்டின் நலம்' என்று ஒன்று இருக்கிறதே அது எந்த நேரத்திலும் அழிவின்றி வளர்ந்தோங்க வேண்டியதாகும் என்ற சிந்தனை அற்றவர்களாகக் கடந்த கிழமை காங்கிரஸ் தலைவர்கள் வரிந்து கட்டிக்கொண்டிருந்தார்கள். இவர்களிடத்திலே நாட்டை ஒப்படைத்திருக்கிறோமே என்று ஒவ்வொரு பொறுப்புள்ள இந்தியக் குடிமகனும் கலங்கிக்கொண்டிருந்தான். நல்ல வேளை, சிறிதாவது நிம்மதியுடன் மூச்சுவிட இடம் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக அவர்களைப் பாராட்டுகிறோம். இப்போது ஏற்பட்டுள்ள காங்கிரஸ் மேலிடத்தவர்களின் 'ஒற்றுமை' புண்ணுக்குப் பூசிய புனுகாக இருக்காது என்ற நம்பிக்கையில்!

★

காஞ்சி 7—9—69 REGD. No. M. 8326

# மருத்துவப் படிப்பு தேர்வு முறை

மருத்துவக் கல்லூரியில் மாணவர் சேர்ப்பதில் தற்போதுள்ள முறையினால் பிற்படுத்தப்பட்ட மாணவர்களும், இதுவரை படிப்பு வாசனையே என்னவென்று அறியாதவர்களும் கணிசமாகத் தேர்ந்தெடுக்கப்படும் வாய்ப்பு உள்ளது என்பதால், ஆரியர் இம்முறையை ஒழித்துக் கட்டி தமது ஆதிக்கத்தை வளரச் செய்யும் புதுமுறையைப் புகுத்த மிகக் குறியாக இருக்கின்றனர்!

மருத்துவப் படிப்பிற்கு மாநில முழுவதும் 1100 இடங்கள் என்றால், வரும் மனுக்களோ சுமார் 7000 ஆகும்! இந்த நிலையில் 4- அல்லது 5 கமிட்டியினர் உட்கார்ந்து, தேர்வு நடத்தினால்கூட, எல்லா மாணவர்களையும் நேரிடைப் பேட்டி கண்டு, பிறகு தேர்வை இறுதியாக்குவதற்குக் குறைந்த பட்சம் ஒரு மாதமாவது ஆகிறது.

இடம் கிடைக்காதவர்கள் சிலர், கோர்ட்டுகளில் "ரிட்" போட்டால் தங்களுக்கு ஒரு "சான்ஸ்" அடித்தாலும் அடிக்கலாம் என்று கருதி ஒரு ரூபாய் லாட்டரி சீட்டு வாங்கி, ஒரு லட்சத்தை குலுக்கலில் எதிர்பார்ப்பது போல், கோர்ட்டுக்கும் செல்கிறார்கள்.

ஆரியர்களிடம் இங்கிலீஷ்; தமிழ் செய்தித் தாள்கள் உள்ளன என்பதை வைத்துக்கொண்டு அரசு மீதும், கமிட்டியினர் மீதும், அவர்கள் ஏதோ ஓரவஞ்சனையுடன் தேர்வு நடத்தியுள்ளார்களோ என்று வீண் சந்தேகத்தைக் கிளப்பும் வண்ணம், "ஆசிரியருக்குக் கடிதங்கள்" பெயரில் செல்லாக் காசான சில ஏவு கணைகளை விட்டுப் பார்க்கின்றனர்.

அவர்கள் தங்கள் வாதத்திற்குக் கவர்ச்சியூட்டும் தன்மையில் 'இந்த மாணவர் மூன்று டி. டி. பிளஸ் வாங்கினார்; அந்த மாணவி எல்லாவற்றிலும் டி. டி. பிளஸ் வாங்கினார். இருந்தும் அவர் தேர்ந்தெடுக்கப் படவில்லை" என்றெல்லாம் எழுதுகின்றனர்.

அவர்களில் சிலர் டி. டி. பிளஸ் வாங்கி இருக்கலாம்; ஆனால் நேரிடைப் பேட்டித் தேர்வு ஒன்று வரும் போது, அதற்கு முன்பு வைக்கப் பட்டிருந்த இன்டர்வியூ மார்க் 150 ஆக இருந்தது 75 ஆகக் குறைக்கப்பட்டுள்ள நிலையில், தேர்வுக்கான விஞ்ஞானப் பாடங்களில் (Physical Science and Natural Science) சுமார் 130 மார்க்குகள், (அதாவது முதல் வகுப்பு மார்க் ஆகிய 60க்கு மேல் ஒவ்வொன்றிலும்) வாங்கியவர்கள் தானே பெரிதும் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள்?

டி. டி. பிளஸ் வாங்கிய சிலர் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றால் அதற்குக் காரணம் என்ன? யோசிக்க வேண்டாமா?

நேரிடைப் பேட்டியில் குழுவினர் கேட்கும் சாதாரண பொது அறிவுக் கேள்விகளுக்கோ, அல்லது, எந்த பாடத்தில் டி. டி. பிளஸ் வாங்கியிருப்பதாக ஜம்பம் பேசுகிறார்களோ அப்பாடங்களில் உள்ள விஷயங்கள் குறித்தோ (Subjects) கேட்கப்படும் கேள்விக்குக்கூட சரியாகப் பதில் கூற முடியாது திருதிருவென விழித்தால் 75க்கு அவர்களுக்கு சுன்னம் (0) தானே கிடைக்கும்?

நேரிடைப் பேட்டி என்பது உடற்கட்டு, பொது அறிவு, மதிநுட்பம் இவைகளைச் சோதிப்பதற்குத் தானே!

"கல்பாக்கம் எங்கே இருக்கிறது? ஆனைமலையின் முக்கியத்துவம் என்ன? நெய்வேலியில் என்ன கிடைக்கிறது? நீலகிரி எதற்குப் பெயர் பெற்றது? என்பது போன்ற சாதாரண கேள்விகளுக்குக் கூட பதிலளிக்க முடியாதவர்கள் டி. டி. பிளஸ் வாங்கியிருந்தால் போதுமா? புத்தகப் பூச்சிகளாக இருக்கலாமா? அப்படியேதான் இத்தகைய மாணவர்கள், அவர்கள் அதிக மார்க் வாங்கியுள்ள பாடங்களிலாவது திறமையான அறிவு படைத்தவர்களாக உள்ளார்களா என்ற சோதனைக்கும் நிற்கவில்லையே!

இப்படிப்பட்ட தேவையற்ற வீண் பழியும், விரக்தி படைத்தோரின் வெட்டிப் புகார்களும் கிளம்பாமல் இருக்கவேண்டும் என்பதற்கே சில தேர்வுக் கமிட்டித் தலைவர்கள் அம்மாணவ மாணவியரிடம் வாயால் கேள்வி கேட்பதோடு நிற்காமல் ஒரு தாளையும் கொடுத்து; கணக்கு (equation) முதலியவற்றைப் போட வைத்துள்ளனர். அந்த ஆதாரங்களும் உள்ளன. அந்த மாணவர்கள் எவ்வளவு சூன்யங்களாக உள்ளனர் என்பதற்கு அதுவே தக்க எடுத்துக் காட்டு.

இரண்டு டி. டி. பிளஸ் வாங்கிய மாணவருக்கு "குவிந்த ஆடி குழிந்த ஆடி" (Concave Convex Lense) என்றால் கூட வரையத் தெரியாது என்றால் அந்த டி. டி. பிளஸ் மார்க் அவர்கள் வாங்கியதா அவர்களுக்கு ஆக வேட்டையாடி பெற்றதா என்ற ஐயம் யாருக்கும் தோன்றத்தானே செய்யும்!

இந்நிலையில் இத்தகைய மாணவர்கள் தேர்வுப் பட்டியலில் இடம் பெறாததில் வியப்பு என்ன? வேதனை ஏன்?

—30—8—69ல்
'விடுதலை' தலையங்கம்.

## நட்பு

நட்பு மாலை நிழல்; அது வாழ்க்கைக் கதிரவன் அஸ்தமிக்கும் பொழுது வலிமையடையும்.

—லாஃபான்டெயின்

நட்பு நம் இன்பத்தைப் பெருக்கி, துன்பத்தைக் குறைக்கின்றது. அது இன்பத்தை இரட்டிப்பாக்குகின்றது; துன்பத்தைப் பகிர்ந்துகொள்கின்றது.

—அடியஸன்

நட்பு கொள்வதில் நிதானமாகச் செல்லவும்; ஆனால் நட்பு கொண்டபின் அதில் உறுதியாகவும் நிலையாகவும் நிற்கவும்.

—சாக்ரடீஸ்

ஒரு நண்பனைப் பெறுதற்கு, நீ ஒரு நண்பனாயிருப்பது ஒன்றே வழி.

—எமர்ஸன்

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம் 26 திருக்கச்சிநம்பி தெரு அல்லி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது